


இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 229 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 17 – சனிக்கிழமை 30 மார்ச் 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 229 : Thiruvalluvar Year - 2055 - Panguni 17 - Saturday 30 March 2024 - Dak 12 Pages ₹ 5.00







## நாடாளுமன்றத் தேர்தல்: ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடர் பிரச்சாரம்!

### இன்று - சேலம் - கள்ளக்குறிச்சி வேட்பாளர்களை ஆதரித்து பெத்தநாயக்கன் பாளையத்தில் உரையாற்றுகிறார்!

2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தமிழ்நாடு முழுவதும் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார்.

கழகத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளும் தேர்தல் பிரச்சாரப் பயண விவரம் வருமாறு :



| தேதி | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|
| 30.03.2024 (சனிக்கிழமை) | சேலம், கள்ளக்குறிச்சி |
| 31.03.2024 (ஞாயிற்றுக்கிழமை) | ஈரோடு நாமக்கல் கரூர் |
| 02.04.2024 (செவ்வாய்க்கிழமை) | வேலூர், அரக்கோணம் |
| 03.04.2024 (புதன்கிழமை) | திருவண்ணாமலை ஆரணி |
| 05.04.2024 (வெள்ளிக்கிழமை) | கடலூர், விழுப்புரம் |
| 06.04.2024 (சனிக்கிழமை) | சிதம்பரம், மயிலாடுதுறை |
| 07.04.2024 (ஞாயிற்றுக்கிழமை) | புதுச்சேரி |
| 09.04.2024 (செவ்வாய்க்கிழமை) | மதுரை, சிவகங்கை |
| 10.04.2024 (புதன்கிழமை) | தேனி, திண்டுக்கல் |
| 12.04.2024 (வெள்ளிக்கிழமை) | திருப்பூர், நீலகிரி |
| 13.04.2024 (சனிக்கிழமை) | கோவை, பொள்ளாச்சி |
| 15.04.2024 (திங்கட்கிழமை) | திருவள்ளூர் வடசென்னை |
| 16.04.2024 (செவ்வாய்க்கிழமை) | காஞ்சிபுரம், திருபெரும்புதூர் |
| 17.04.2024 (புதன்கிழமை) | தென்சென்னை, மத்திய சென்னை |

குறிப்பு : முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை18.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

## கெஜ்ரிவால் கைது : ஒன்றிய அரசு மீது ஐ.நா சபை கண்டனம்!

### காங்கிரஸ் வங்கிக்கணக்கு முடக்கப்பட்டது குறித்து ஐ.நா. கேள்வி !

*நியூயார்க், மார்ச் 30-*


இந்தியாவில் அனைவரின் உரிமைகளும் பாதுகாக்கப்படும் என நம்புகிறோம் - என்றும் இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் நடத்துவதை உறுதிசெய்ய வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.



இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், ஒன்றிய பா.ஜ.க. அரசு அமலாக்கத்துறை, வருமான வரித்துறை போன்ற விசாரணை அமைப்புகள் மூலம் எதிர்க்கட்சிகளை முடக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. அதன்படி, காங்கிரஸ் கட்சியின் வங்கிக்கணக்குகள் முடக்கப்பட்டதுடன், டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலையும் கைது செய்தது. கெஜ்ரிவாலின் கைதுக்கு ஜெர்மனி மற்றும் அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்தன.

நீதித் துறையின் சுதந்திரம், அடிப்படை ஜனநாயகக் கோட்பாடுகள், கெஜ்ரிவால் வழக்கில் பயன்படுத்தப்படும் என எதிர்பார்ப்பதாக ஜெர்மனி கூறியது. இந்தியாவில் பொதுத்தேர்தல் நேர்மையான, நியாயமான முறையில் நடைபெற வேண்டும் என விரும்புவதாக கூறிய அமெரிக்கா, காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டிருப்பது, அக்கட்சியின் தேர்தல் பிரச்சாரத்தை பாதிக்கும் என்றும், கெஜ்ரிவால் கைது விவகாரத்தில் நியாயமான, வெளிப்படையான விசாரணையை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், இந்த விவகாரங்கள் தொடர்பாக நியூயார்க் நகரில் செய்தியாளர்களிடம் பேசிய ஐ.நா. பொதுச்சபை செய்தித் தொடர்பாளர் ஸ்டீபன் துஜாரிக், இந்தியாவில் அனைவரின் உரிமைகளும் பாதுகாக்கப்படும் என்று எதிர்பார்ப்பதாக தெரிவித்தார். மேலும், தேர்தல் நடைபெறும் ஒரு நாட்டில் மக்களின் “அரசியல் மற்றும் சிவில் உரிமைகள்” பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். மேலும், இந்தியாவில் சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் தேர்தல் நடத்துவதை உறுதி செய்ய வேண்டும் ஸ்டீபன் துஜாரிக் வலியுறுத்தினார்.



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 30-03-2024

# ‘நிலக்கரி’ ஜிண்டாலும் ‘சுரங்கம்’ ஜனார்த்தனனும்

**ஊழலை ஒழிக்கப் போகிறேன், ஊழலை ஒழிக்கப் போகிறேன் என்று பிதற்றிக் கொண்டிருக்கும் பிரதமர் மோடி அவர்கள், இரண்டு பேருக்கு பா.ஜ.க.வில் தொகுதி ஒதுக்கி இருக்கிறார். அவரது ஊழல் ஒழிப்பு என்பது பா.ஜ.க.வுக்குள் அவர்களைச் சேர்த்துவிட்டால் முடிவுக்கு வந்துவிடும் என்பதற்கான உதாரணம் ஆகும்.**

**“ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்” என்பார்கள். பா.ஜ.க. பெரிய பானை என்பதால் இரண்டு சோறு பதம். மிகப்பெரிய மலை முழுங்கிகள் என்ற அடிப்படையில் நடவடிக்கைகளுக்கு உள்ளாகி விசாரணை அமைப்புகளால் வழக்குத் தொடுத்தும் - கைது செய்யப்பட்டும் இருந்தவர்களை கூச்சமில்லாமல் பா.ஜ.க.வில் இணைத்துக் கொண்டுதான் ஊழலை ஒழிக்கப் போகிறார் மோடி. இதை இந்த நாட்டு மக்கள் நம்பத்தான் வேண்டும்.**

இப்போது விசாரணை அமைப்புகளை வைத்துக் கொண்டு தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதும், முதலமைச்சர் என்றுகூட பார்க்காமல் அரவிந்த் கெஜ்ரிவாலை வேட்டையாடு கிறார்களே, இவர்களால் இதற்கு முன்னால் வேட்டையாடப் பட்டவர்களை வெட்கமில்லாமல் சேர்த்துக் கொண்டு தொகுதியும் ஒதுக்குகிறார்களே, இவர்கள்தான் ஊழலை ஒழிக்கப் போகிறார்களா?

ஜிண்டால் பற்றி அறிமுகம் தேவையில்லை. இந்தியாவின் புகழ் பெற்ற தொழில் நிறுவனங்களில் ஒன்று ஜிண்டால். அதன் அதிபர்தான் நவீன் ஜிண்டால். இவர் காங்கிரஸ் கட்சியில் தான் இருந்தார். அவரை பா.ஜ.க.வுக்கு இழுத்துக் கொண்டு அவருக்கு தொகுதியும் ஒதுக்கி இருக்கிறார்கள். 2004 ஆம் ஆண்டு அரியானா மாநிலம் குருஷேத்ரா தொகுதியில் இருந்து காங்கிரஸ் கட்சி எம்.பி.யாக வென்றவர் நவீன் ஜிண்டால். 2009 தேர்தலிலும் அவர் வென்றார். 2014 தேர்தலில் தோல்வி அடைந்தார். இவர் திடீரென்று இந்த மாதம் பா.ஜ.க.வில் சேர்ந்துவிட்டார். ‘பா.ஜ.க.வுக்கு பெரிய வாஷிங் மிஷின் தேவைப்பட்டதால் நவீன் தேவைப்படலாம்’ என்று கிண்டலடித்துள்ளார் ஜெயராம் ரமேஷ். நவீன் ஜிண்டாலை மீண்டும் அவரது வழக்கமான தொகுதியான குருஷேத்ராவில் நிறுத்தி உள்ளது பா.ஜ.க.

ஜார்க்கண்ட் நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீட்டில் நடந்த முறைகேடுகள் தொடர்பான வழக்கில், ஜிண்டால் மத்திய புலனாய்வுப் பிரிவால் விசாரிக்கப்பட்டு வந்தார். 2019 ஆம் ஆண்டு நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீடு முறைகேடு வழக்கில் நவீன் ஜிண்டால் மற்றும் நான்கு பேர் மீது ஜூலை 25 ஆம் தேதி புது தில்லி நீதிமன்றம் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது. ஐ.பி.சி. பிரிவுகள் 120-பி (குற்றச் சதி) மற்றும் 420 (ஏமாற்றுதல்) ஆகியவற்றின் கீழ் சிறப்பு நீதிபதி பாரத் பராஷர் குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். நிலக்கரியின் இறுதிப் பயன்பாடு தொடர்பான உண்மைகளை ஸ்க்ரீனிங் கமிட்டியிடம் தவறாகக் காட்டி, குற்றம் சாட்டப்பட்டவர்கள் அந்த ஒப்பந்தத்தை கையகப்படுத்தியதாக சி.பி.ஐ. குற்றம் சாட்டியது. குற்றம் சாட்டப்பட்டவர் நிலக்கரி அமைச்சகத்தை ஏமாற்றிவிட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டார்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களை பா.ஜனதா தனது கட்சியில் இணைத்துக் கொள்ளும்போது அவர்கள் மீதான குற்றச்சாட்டு குறித்து வாய் திறப்பதில்லை அல்லவா? அப்படித்தான் இவரும் சுத்தமாகி விட்டார்.

‘இரும்புத் தாது’ மாஃபியா என்று அழைக்கப்பட்டவர் ஜனார்த்தன ரெட்டி. பா.ஜ.க.வின் முக்கியத் தலைவர்களில் ஒருவராக இருந்த - மறைந்த சுஷ்மா சுவராஜ்தான் ரெட்டி சகோதரர்களுக்கு காப்பாளர். சுஷ்மா, பெல்லாரி தொகுதியில் போட்டியிட்டபோது முழுமையாக தேர்தல் பணியாற்றியவர்கள் இவர்கள். கர்நாடகாவில் பா.ஜ.க. காலூன்ற அடித்தளம் இட்டவர்களில் முக்கியமானவர்கள் ஜனார்த்தனன். 2006 ஆம் ஆண்டு பி.ஜே.பி. - ஜே.டி.எஸ். கூட்டணி ஆட்சி அமைந்தபோது தனது ஆதரவாளரான பி.ரீராமுலுவை அமைச்சர் ஆக்கும் அளவுக்கு இவர்களுக்கு செல்வாக்கு வளர்ந்தது. ஜனார்த்தனன் ரெட்டிக்கு மேலவை உறுப்பினர் பதவியை வழங்கியது பா.ஜ.க.

பின்னர் கூட்டணி இல்லாமல், தனித்து பா.ஜ.க. ஆட்சி அமைக்கவும் ரெட்டி சகோதரர்களே பெரும் பங்கு ஆற்றினார்கள். இதற்கான பரிசாக எடியூரப்பா அமைச்சரவையில் சுற்றுலா மற்றும் உள்ளாட்சி அமைச்சராக ஆனார் ஜனார்த்தனன் ரெட்டி. பெல்லாரி மாவட்டத்தின் பொறுப்பாளராகவும் ஆக்கினார்கள். 2022 ஆம் ஆண்டு பா.ஜ.க.வில் இருந்து வெளியேறி ‘கல்யாண ராஜ்ய பிரகதி பக்ஷா’ என்ற புதிய அரசியல் கட்சியை ரெட்டி தொடங்கினார். கடந்த ஆண்டு நடந்த சட்டசபைத் தேர்தலில் கங்காவதி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வென்றார். இப்போது அந்தக் கட்சியைக் கலைத்துவிட்டு பா.ஜ.க.வில் இணைந்துவிட்டார்.

கர்நாடகாவில் பா.ஜ.க. ஆட்சியில் இருந்த 2008-2013 காலக்கட்டத்தில் சட்டவிரோதச் சுரங்கம் தொடர்பாக சி.பி.ஐ. தொடுத்த வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர் தான் ஜனார்த்தன் ரெட்டி. தன்னை அமித்ஷா தான் கட்சியில் இணையச் சொன்னதாக ரெட்டி சொல்லி இருக்கிறார்.

‘2006 முதல் 2011 வரை கர்நாடகாவில் இருந்து 12,228 கோடி ரூபாய்க்கு இரும்புத் தாதுவை சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்தார்கள்’ என்ற குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. 2011-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சி.பி.ஐ.யால் கைது செய்யப்பட்டார். கிட்டத்தட்ட ஓராண்டு காலம் சிறையில் இருந்த ரெட்டி, உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் பல்லாரி பகுதிக்குள் செல்ல தடையும் விதிக்கப்பட்டது. 2023 கர்நாடக சட்டமன்றத் தேர்தலுக்காக ரெட்டி தாக்கல் செய்த தேர்தல் பிரமாண பத்திரத்தின் படி, அவர் மீது 20 கிரிமினல் வழக்குகள் நிலுவையில் உள்ளன. 20 வழக்குகளில், ஒன்பது வழக்குகள் சட்டவிரோத சுரங்க ஊழல் தொடர்பாக சி.பி.ஐ.-யால் விசாரிக்கப்படுகின்றன. கடந்த ஆண்டு கூட இவர் மீதான வழக்கில் வெளிநாடுகளுக்குத் தகவல்கள் கேட்டு கடிதம் அனுப்பியது சி.பி.ஐ. இப்படிப்பட்டவர் பா.ஜ.க.வில் இணைய முழுத் தகுதி படைத்தவர்தான்.

**‘பா.ஜ.க.வில் நான் இணைந்தது, தாயுடன் வந்து சேர்ந்ததைப் போல’ என்று சொல்லி இருக்கிறார் ஜனார்த்தனன் ரெட்டி. ஊழல், ஊழலோடு தானே சேரும்!**



‘இந்தியா’ கூட்டணியின் சார்பில் கோயம்புத்தூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் கணபதி ராஜ்குமாரை ஆதரித்து, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். கோயம்புத்தூர் நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள மலுமிச்சம்பட்டி பகுதியில் கூடி நின்ற மக்களைச் சந்தித்து,உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு அளிக்கப் பிரச்சாரம் செய்தார்.

# பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பிறகு பெண்கள், குழந்தைகளுக்கு பாதுகாப்பில்லை!

## கோவையில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி பேச்சு!

கோவை, மார்ச் 30-

தமிழ்நாட்டில் ஏப்ரல் 19ம் தேதி நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலைத் தேர்தலையொட்டி, இந்தியா கூட்டணியின் சார்பில் கோயம்புத்தூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் கணபதி ராஜ்குமார் ஆதரித்து, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். கோயம்புத்தூர் நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள துடியலூர் சந்தை சந்திப்பு பகுதியில் கூடி நின்ற மக்களைச் சந்தித்து, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு அளிக்கப் பிரச்சாரம் செய்தார்.

இந்த தொகுதியில் நாம் தெளிவாக வாக்களிக்க வேண்டும், இல்லையென்றால் அது இந்தியாவிற்கே பெரிய ஆபத்தாக அமையும், தனது சொந்த தொகுதியில் போட்டியிட்டால் தோல்வி அடைந்து விடுவோம் என்று வானதி ஸ்ரீனிவாசன் மூலம் வெற்றி பெற்று விடாமல் என்று கோவையில் நிற்கிறார் அண்ணாமலை, எங்கு நின்றாலும் 3வது இடம் தான். மக்களுக்கு இடையே பொய் செய்திகளைப் பரப்புவதற்காகத் தனிக் குழுவினை வைத்துச் செயல்பட்டு வருகிறார்கள். மக்களிடம் பொய் செய்தி மூலம் பிரிவினை ஏற்படுத்திட வேண்டும் அன்று செயல்படுகின்றனர்.

20,000 புத்தகம் இதுவரை படித்துள்ளாராம், 5 வயதில் இருந்து நாள் ஒன்று 2 புத்தகம் படித்தாலும் கூட 20000 ஆயிரம் புத்தகம் படித்து இருக்க முடியாது.

**அண்ணாமலைக்கு எது எடுத்தாலும் பொய்தான்!**

அண்ணாமலைக்கு எது எடுத்தாலும் பொய் தான். பா.ஜ.க.வினர் பெரிய சலவை இயந்திரம் வைத்துள்ளனர், ஊழல் செய்த நபர் பா.ஜ.க.வில் சேர்ந்தாலும் உடனே சலவை செய்து அவரை வெள்ளையாக மாற்றி விடுவார்கள், ஆனால் அவர்கள் செய்யும் ஊழல் நாம் எடுத்துரைத்தால் உடனே அவர்கள் கைது, அல்லது வருமான வரித்துறை, அமலாக்கத்துறை சோதனை செய்வர்.

அ.தி.மு.க., பா.ஜ.க. கூட்டணி இல்லை, என்று கூறும் எடப்பாடி, எங்காவது மோடி அரசு பற்றிப் பேசுகிறாரா, இல்லை. இது சட்டமன்ற தேர்தல் என்று நினைத்து நாம் அரசைப் பற்றி எடப்பாடி பழனிசாமி குறை கூறி வருகிறார். சேலத்தில் 2 விவசாயிகள் நிலத்தை பா.ஜ.க.வினர் அபகரிக்க நினைத்தனர், அவர்கள் நிலத்தைத் தரவில்லை என்றதும் அவர்கள் மீது அமலாக்கத் துறை ஏவி சோதனை செய்தனர்.

**பா.ஜ.க.தான் அனைவருக்கும் எதிரான கட்சி!**

தி.மு.க.வை கோயிலுக்கும், இந்து மதத்திற்கும், பெரும்பான்மை மக்களுக்கும் எதிரானவர்கள் என்று சொல்லுகிறது பா.ஜ.க., பா.ஜ.க. தான் அனைவருக்கும் எதிரான கட்சி. தி.மு.க.வின் கலைஞர் மகளிர் உரிமை திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ் புதல்வன் போன்ற திட்டங்களில் பெரும்பான்மை மக்கள் தான் பயன்பெற்று வருகின்றனர். 1,331 கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்திய ஆட்சி, திராவிட மாடல் ஆட்சி, சிறு கோயில் வழங்கப்படும் மானியத்தை 1 லட்சத்திலிருந்து 2 லட்சம் உயர்த்தி வழங்கியவர் நமது முதலமைச்சர்.

யாருக்குக் கடவுள் நம்பிக்கை இருக்கிறது இல்லை என்பது முக்கியம் இல்லை, அவர்களுக்கு யார் நம்பிக்கையாக இருக்கிறார் என்பது தான் முக்கியம். 770 கோடி ஒதுக்கீடு செய்து, இந்த பகுதியின் தண்ணீர் தட்டுப்பாட்டைச் சரி செய்து வரும் தி.மு.க. ஆட்சி. நாம் தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்றால் நமது வேட்பாளர் கணபதி ராஜ்குமார் அவர்களை உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும் என பிரச்சாரத்தின் போது கனிமொழி கருணாநிதி தெரிவித்தார்.

## ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# புதுடெல்லியில் நாளை ‘இந்தியா’ கூட்டணி ஆர்ப்பாட்டம்!

புதுடெல்லி, மார்ச் 30-

நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சிகளை முடக்கிவரும் ஒன்றிய பாஜ.க. அரசைக் கண்டித்து தலைநகர் டெல்லியில் இந்தியா கூட்டணி சார்பில் நாளை (31.03.2024) பிரமாண்ட ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சிகளை முடக்க விசாரணை அமைப்புகளை பயன்படுத்தி மோடி அரசு அனைத்து அட்டூழியங்களையும் செய்து வருகிறது. டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், ஜார்கண்ட் முதலமைச்சர் ஹேமந்த் சோரனை சிறையில் அடைத்துள்ளனர். காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்குகளை முடக்கி உள்ளனர். ஒன்றிய பா.ஜ.க. அரசின் சர்வாதிகார நடவடிக்கையை கண்டித்து இந்தியா கூட்டணி கட்சிகள் சார்பில் தலைநகர் டெல்லியில் நாளை பிரம்மாண்ட ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

டெல்லி ராம்லீலா மைதானத்தில் நடக்கும் போராட்டத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் டி.ராஜா, தி.மு.க. மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி சிவா மற்றும் முக்கியத் தலைவர்களும் பங்கேற்க இருக்கின்றனர். மேலும், இந்தியா கூட்டணி கட்சிகளின் தொண்டர்கள் சுமார் ஒரு லட்சம் பேர் போராட்டத்தில் கலந்து கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதி ஆலங்காயம் ஒன்றியம் நாயக்கனூர், புதூர், பூங்குளம் பகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்கு ‘இந்தியா’ கூட்டணி வேலூர் நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் பொதுமக்களைச் சந்தித்து வாக்குகளைச் சேகரித்தார்.



அமைச்சர் எ.வ.வேலு திருவண்ணாமலையில் தொகுதி கழக வேட்பாளர் சி.என். அண்ணாதுரையை ஆதரித்து திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டையில் திரண்ட மக்களிடையே வாக்குச் சேகரித்தார்.

## பாகிஸ்தானில் தற்கொலை தாக்குதல்!

*இஸ்லமாபாத், மார்ச் 30-*

*பாகிஸ்தானில் நிகழ்த்தப்பட்ட தற்கொலை தாக்குதலில் சீனர்கள் 5 பேர் செவ்வாய்க்கிழமை உயிரிழந்தனர்.*

*பாகிஸ்தானின் கைபர் பக்துன்குவா மாகாணத்தில் சீனப் பொறியாளர்கள் பயணித்த பேருந்து மீது வெடிபொருள்கள் நிரம்பிய வாகனத்தை பயங்கரவாதி ஒருவர் மோதி செவ்வாய்க்கிழமை தற்கொலை தாக்குதல் நிகழ்த்தினார். இதில் சீனர்கள் சென்ற பேருந்து வெடித்து பள்ளத்தில் கவிழ்ந்து தீப்பற்றி எரிந்தது.*

*இந்தத் தாக்குதலில் ஒரு பெண் உள்பட 5 சீனர்கள் உயிரிழந்தனர். அவர்கள் கைபர் பக்துன்குவாவின் டாசு பகுதியில் நீர்மின் திட்டப் பணியில் ஈடுபட்டு வந்தனர். பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்துக்கு அவர்களின் உடல் கொண்டு செல்லப்பட்டது. இந்தத் தாக்குதலுக்கு எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.*

# வருமான வரித்துறை புதிய நோட்டீஸ்!

## பா.ஜ.க. அரசின் சதி என காங். குற்றச்சாட்டு !

புதுடெல்லி, மார்ச் 30 - 2017 முதல் 3 நிதி ஆண்டுகளுக்கான கணக்கை நாளை மறுநாளுக்குள் தாக்கல் செய்யுமாறு காங்கிரஸ் கட்சிக்கு, வருமான வரித்துறை திடீர் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் காங்கிரஸ் கட்சி வருமான வரி தாக்கல் செய்ய தாமதமானதாக கூறி , வருமான வரித்துறை 250 கோடி ரூபாய்க்கும் மேல்அபராதம் விதித்து நோட்டீஸ் அனுப்பி இருந்தது.

இதனை தொடர்ந்து, காங்கிரஸ் கட்சியின் 11 வங்கி கணக்குகளையும் முடக்கியது.

இதனை எதிர்த்து காங்கிரஸ் கட்சி தொடர்ந்த மேல் முறையீட்டு வழக்கை வருமான வரித்துறை மேல் முறையீட்டு தீர்ப்பாயம் தள்ளுபடி செய்தது.

இந்த நிலையில், கடந்த 2017 - 18 முதல் 2020 - 21 ஆம் ஆண்டு வரையிலான 3 நிதி ஆண்டுகளுக்கான கணக்குகளை வரும் 31ஆம் தேதிக்குள் தாக்கல் செய்ய வேண்டும் என வருமான வரித்துறை புதிய நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

மேலும், இந்த 3 ஆண்டுகளில் அபராதம், அபராதத்துக்கு அபராதம் உட்பட ஆயிரத்து 700 கோடி ரூபாய்க்கான நோட்டீசை அனுப்பியுள்ளது.

வருமானவரித் துறையின் இந்த செயல் காங்கிரஸ் கட்சியை முற்றிலுமாக செயல் இழக்க செய்யும் பா.ஜ.க.வின் சதித் திட்டம் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால் குற்றம்சாட்டியுள்ளார்.

வருமான வரித்துறையின் நோட்டீசை எதிர்த்து, நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும் என்றும் காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

## 100 நாள் வேலைத் திட்டம்

# ரூ. 7 வரை உயர்த்திவிட்டு ரூ.700 கோடிக்கு விளம்பரம்!

## ராகுல்காந்தி விமர்சனம்!

புதுடெல்லி, மார்ச் 30 - நூறு நாள் வேலை திட்ட சம்பளத்தை சுமார் 7 ரூபாய் வரை உயர்த்திவிட்டு மோடி அரசு 700 கோடி ரூபாய் செலவில் விளம்பரம் தேடிக் கொள்ளும் என காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

100 நூறு நாள் வேலை திட்டத்தில் தினசரி சம்பளத்தை 3 முதல் பத்து சதவிகிதம் வரை ஒன்றிய அரசு உயர்த்தியுள்ளது.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரிக்கு தினசரி ஊதியம் 294 ரூபாயாக இருந்த நிலையில் 319 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

இது குறித்து சமூக வலைதளத்தில் கருத்து பதிவிட்டுள்ள காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல் காந்தி,

100 நாள் வேலை திட்ட பணியாளர்களின் ஊதியத்தை ஏழு ரூபாய் உயர்த்தியுள்ள மோடி அரசு, அதற்காக 700 கோடி ரூபாய் செலவில் விளம்பரம் தேடிக்கொள்ளும் என கூறியுள்ளார்.

7 ரூபாய் உயர்த்திவிட்டு, இவ்வளவு பெரிய தொகையை நீங்கள் என்ன செய்வீர்கள் என்று 100 நாள் வேலைத் திட்ட பணியாளர்களிடம் மோடி கேள்வி கேட்பார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்ததும், முதல் நாளிலேயே 100 நாள் வேலைத் திட்ட பணியாளர்களின் சம்பளம் 400 ரூபாயாக உயர்த்தப்படும் என்றும் காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

## டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலை

# பதவியில் இருந்து நீக்க உத்தரவிட முடியாது!

## டெல்லி ஐகோர்ட் அதிரடி உத்தரவு !

புதுடெல்லி, மார்ச் 30–

அரவிந்த் கெஜ்ரிவாலை முதல்வர் பதவியில் இருந்து நீக்கக் கோரிய மனுவை டெல்லி ஐகோர்ட் தள்ளுபடி செய்தது. டெல்லி அரசின் புதிய மதுபானக் கொள்கை முறைகேடு விவகாரத்தில் அம்மாநில முதல்வர் கெஜ்ரிவாலை அமலாக்கத்துறை கடந்த 21ம் தேதி கைது செய்தது.




இந்த கைது நடவடிக்கையை எதிர்த்தும், உடனடியாக தன்னை விடுவிக்கக் கோரியும் கெஜ்ரிவால் தரப்பில் டெல்லி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்ட விவகாரத்தில் தலையிட டெல்லி உயர் நீதிமன்றம் மறுத்துவிட்டது. இதனிடையே நிதிமுறை கேட்டில் குற்றம் சாட்டப்பட்டுள்ளதால் கெஜ்ரிவாலை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என சுர்ஜித் சிங் என்பவர் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கு நேற்று முன்தினம் டெல்லி உயர் நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதி மன்மோகன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் முதலமைச்சர் பதவியில் இருக்கக் கூடாது என்று தடை உள்ளதா என்று மனுதாரரிடம் பொறுப்பு தலைமை நீதிபதி கேள்வி எழுப்பினார்.

இந்த விவகாரத்தில் நீதிமன்றம் எவ்வாறு தலையிட முடியும்? பதவியில் இருந்து நீக்குவது குறித்து துணைநிலை ஆளுநர், குடியரசுத் தலைவர் தான் இதில் முடிவு செய்ய முடியும். டெல்லியில் நிர்வாக பிரச்சனை ஏற்பட்டால் குடியரசுத் தலைவர், ஆளுநர் நடவடிக்கை எடுப்பார்கள். டெல்லியில் குடியரசு தலைவர் ஆட்சியை அமல்படுத்தும்படி நீதிமன்றம் உத்தரவிட முடியாது. முதலமைச்சராக கெஜ்ரிவால் தொடரும் விவகாரத்தில் நீதிமன்றம் தலையிட முடியாது என்று கூறி மனுவை நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர்.

## தமிழ் மாநில தேசிய லீக் பொதுச்செயலாளர்

# திருப்பூர் அல்தாப் பிரச்சாரம்!



| நாள் | கிழமை | தொகுதி |
|---|---|---|
| 31.03.2024 | ஞாயிறு | தென் சென்னை |
| 01.04.2024 | திங்கள் | தஞ்சாவூர் |
| 02.04.2024 | செவ்வாய் | பெரம்பலூர் |
| 03.04.2024 | புதன் | திருச்சி |
| 04.04.2024 | வியாழன் | இராமநாதபுரம் |
| 05.04.2024 | வெள்ளி | இராமநாதபுரம் |
| 06.04.2024 | சனி | தூத்துக்குடி |
| 07.04.2024 | ஞாயிறு | தேனி |
| 09.04.2024 | செவ்வாய் | ராணிப்பேட்டை வேலூர், ஆம்பூர் வாணியம்பாடி |
| 10.04.2024 | புதன் | சேலம், கள்ளக்குறிச்சி |
| 11.04.2024 | வியாழன் | கோவை, பொள்ளாச்சி |
| 12.04.2024 | வெள்ளி | திருப்பூர் (பகுதி செயலாளர் உசேன் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சி ) |
| 13.04.2024 | சனி | ஊட்டி, நீலகிரி |
| 14.04.2024 | ஞாயிறு | விழுப்புரம், செஞ்சி செங்கம் |
| 15.04.2024 | திங்கள் | திருப்பெரும்புதூர் |
| 16.04.2024 | செவ்வாய் | வடசென்னை, மத்திய சென்னை தென் சென்னை |
| 17.04.2024 | புதன் | தி.மு.க. தலைவர் அவர்களின் நிறைவு பிரச்சார கூட்டம் |

# நீதித்துறை மீது மோடி அரசு தாக்குதல்!

## காங்கிரஸ் குற்றச்சாட்டு !

*புதுடெல்லி, மார்ச் 30 -*

*நீதித்துறையை பாதுகாப்பது போல் அதன் மீது மோடி அரசு தாக்குதல் நடத்தி வருவதாக காங்கிரஸ் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.*

*உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞர் ஹரிஷ் சால்வே, இந்திய பார் கவுன்சில் தலைவர் மன்னன் குமார் மிஸ்ரா மற்றும் 600 வழக்கறிஞர்கள் அடங்கிய குழு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட்டுக்கு கடிதம் எழுதியுள்ளனர்.*

*அதில், நீதித்துறைக்கு அழுத்தம் கொடுக்கவும், நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையிடவும் ஒரு குழு முயன்று வருகிறது என்றும், அரசியல்வாதிகள் தங்களுக்கு சாதகமான தீர்ப்பு வரவில்லை என்றால் நீதிமன்றங்களுக்கு உள்ளேயும், ஊடகங்களின் வாயிலாகவும் நீதித்துறையை விமர்சிக்கி ன்றனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.*

*இதுகுறித்து காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெயராம் ரமேஷ் வெளியிட் சமூக வலைதளப்பதிவில், நீதித்துறையை பாதுகாப்பது போல் அதன் மீது மோடி தாக்குதல் நடத்துவது பாசாங்குத் தனத்தின் உச்சம் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*10 ஆண்டுகளில் மக்களை பிரித்தாளவும், கவனத்தை திசை திருப்ப வும், அவதூறுகளை பரப்புவதையும் தான் செய்து வந்தாகவும், விரைவில் 140 கோடி மக்கள் மோடிக்கு தகுந்த பதிலடி கொடுக்க தயாராகி விட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.*

# 'இந்தியா' கூட்டணி கட்சிகள் பீகாரில் தொகுதி உடன்பாடு!

*பாட்னா, மார்ச் 30 -*

*நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க.வை எதிர்த்து நாட்டில் உள்ள 28 கட்சிகள் இணைந்து 'இந்தியா' கூட்டணியை உருவாக்கியுள்ளன.*

*'இந்தியா' கூட்டணி கட்சிகள் இடையே தொகுதி பங்கீடு இறுதி செய்யப்பட்டு வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றனர்.*

*40 தொகுதிகள் கொண்ட பீகார் மாநிலத்தில் 7 கட்டங்களாக தேர்தல் நடைபெறும் நிலையில், அம்மாநிலத்தில் 'இந்தியா' கூட்டணி கட்சிகள் இடையே தொகுதி உடன்பாடு இறுதி செய்யப்பட்டுள்ளது.*

*இது தொடர்பாக 'இந்தியா' கூட்டணி வெளியிட்டுள்ள அறிக்கையில், லாலுபிரசாத் யாதவின் ராஷ்ட்ரிய ஜனதா தளம் 26 தொகுதிகளிலும், காங்கிரஸ் 9 தொகுதிகளிலும், இடதுசாரிகள் 5 இடங்களிலும் போட்டியிட உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.*

## மதவாத பி.ஜே.பி. கூட்டணியை வீழ்த்திடவும் - 'இந்தியா' கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தும்

# திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பிரச்சாரப் பயணம் தொடங்குகிறார்!



கடந்த 10 ஆண்டுகளாக ஒன்றிய ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்திருக்கும் பி.ஜே.பி. மோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியை வரும் மக்களவைத் தேர்தலில் வீழ்த்திடவும், இந்தியா கூட்டணியை வெற்றி பெறச் செய்வதற்குமான தேர்தல் பிரச்சார சுற்றுப் பயணத்தினை திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் ஏப்ரல் 2ஆம் தேதி தென்காசியில் தொடங்கி, ஏப்ரல்17ஆம் தேதி தஞ்சாவூரில் நிறைவு செய்கிறார்.

கடந்த 10 ஆண்டுகளாக மோடி தலைமையில் இயங்கும் ஒன்றிய பி.ஜே.பி. அரசு, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் மாண்புகளுக்கு எதிராகவும், ஆர்.எஸ்.எஸின் சித்தாந்தங்களைச் செயல்படுத்தும் வகையிலும் மதவாத அரசாக செயல்பட்டு வருகிறது.

மாநிலங்களின் உரிமைகளைப் பறிப்பது, பி.ஜே.பி. ஆளும் மாநிலங்களுக்குச் சாதகமாகவும், பி.ஜே.பி. ஆட்சியில் இல்லாத மாநிலங்களுக்கு விரோதமாகவும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

மக்களின் வளர்ச்சித் திட்டங்களின்மீது கவனம் செலுத்தாமல், ராமன் கோவில் கட்டுவது, பூஜை புனஸ்கார நடவடிக்கைகளில் ஈடுபடுவது, 'ஜெய் ராம்' கோஷங்களை அரசு நிகழ்ச்சிகளில்கூட முழங்குவது, சிறுபான்மை மக்களை வதைப்பது, சமூக நீதியைக் குழிதோண்டிப் புதைப்பது, ஹிந்தி, சமற்கிருத மொழிகளுக்கு நிதியைக் கோடிக்கணக்கில் செலவிடுவது, ஊழலில் பி.ஜே.பி.யை மிஞ்சக்கூடிய ஆட்சி இதற்குமுன் இருந்ததில்லை என்று கூறும் அளவுக்கு (எடுத்துக்காட்டு தேர்தல் பத்திரம்) செயல்படுவது உச்சநீதிமன்றத்தால் கடும் கண்டனத்துக்கு ஆளாவது, இயற்கைப் பேரிட ரில்கூட கட்சிக் கண்ணோட்டத்தோடு நடந்துகொள்வது உள்ளிட்ட மக்கள் விரோத மோடி தலைமையிலான ஆட்சியை வீழ்த்துவது சித்தாந்த ரீதியாகவும், திராவிடர் கழகத்துக்கு முக்கிய பங்கு உண்டு.

"மக்கள் விரோத பா.ஜ.க. அரசை விரட்டியடிப்போம்!" (நூலாசிரியர் கி.வீரமணி) என்ற 48 பக்க நூல் ஒன்றும் திராவிடர் கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்டுள்ளது. தி.மு.க. அரசின் மூன்றாண்டு சாதனைகளை ஆதாரங்களுடன் நூல் ஒன்றும் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தேர்தலிலும் திராவிடர் கழகத்தின் வெளியீடுகள் முக்கியத்துவம் பெற்று வந்திருக்கின்றன பொதுமக்களால் வரவேற்கவும்பட்டுள்ளன.

தேர்தலில் நேரடியாக ஈடுபடாத சமூகப் புரட்சி இயக்கமான திராவிடர் கழகத்திற்கு நாட்டை யார் ஆளவேண்டும் யார் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கக்கூடிய சமூக நலனில் பெரிதும் அக்கறை உண்டு.

கடந்த காலங்களில் தேர்தல்களில் திராவிடர் கழகப் பிரச்சாரத்தின் தாக்கம் குறிப்பிடத்தக்கதாகவும் இருந்திருக்கிறது.

நடக்கவிருக்கும் மக்களவைத் தேர்தலில் கடமை உணர்ச்சியின் அடிப்படையில் திராவிடர் கழகத் தலைவர் மேற்கொள்ளவிருக்கும் பயணம் வெளியிடப்படுகிறது.

கழகப் பொறுப்பாளர்களும், தோழர்களும், வேட்பாளரையும், சம்பந்தப்பட்ட கட்சிகளின் பொறுப்பாளர்களையும் அணுகி, கழகத் தலைவர் மேற்கொள்ளும் பிரச்சாரப் பயணத்தைத் திட்டவட்டமான வகையில் வெற்றிகரமாக நடத்திட ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சுற்றுப்பயண விவரம் வருமாறு :

| வ.எண் | தேதி | நேரம் | கூட்டம் நடைபெறும் இடம் | தொகுதி |
|---|---|---|---|---|
| முதல் கட்டம் | | | | |
| 1 | 02.04.2024 செவ்வாய் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | தென்காசி<br>திருநெல்வேலி | தென்காசி<br>திருநெல்வேலி |
| 2 | 03.04.2024 புதன் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | தூத்துக்குடி<br>விருதுநகர் | தூத்துக்குடி<br>விருதுநகர் |
| 3 | 04.04.2024 வியாழன் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | ஆண்டிப்பட்டி<br>மதுரை | தேனி<br>மதுரை |
| 4 | 05.04.2024 வெள்ளி | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | பழனி<br>உடுமலைப்பேட்டை | திண்டுக்கல்<br>பொள்ளாச்சி |
| 5 | 06.04.2024 சனி | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | கோயமுத்தூர்<br>மேட்டுப்பாளையம் | கோவை<br>நீலமலை |
| 6 | 07.04.2024 ஞாயிறு | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | சத்தியமங்கலம்<br>கோபிசெட்டிப்பாளையம் | நீலமலை<br>திருப்பூர் |
| 7 | 08.04.2024 திங்கள் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | சேலம்<br>அரூர் | சேலம்<br>தருமபுரி |
| இரண்டாம் கட்டம் | | | | |
| 8 | 10.04.2024 புதன் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | அரக்கோணம்<br>திருவள் ளூர் | அரக்கோணம்<br>திருவள் ளூர் |
| 9 | 11.04.2024 வியாழன் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | அம்பத்தூர்<br>வடசென்னை | திருபெரும்புதூர்<br>வடசென்னை |
| 10 | 12.04.2024 வெள்ளி | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | திண்டிவனம்<br>தியாகதுருகம் | விழுப்புரம்<br>கள்ளக்குறிச்சி |
| 11 | 13.04.2024 சனி | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | ஜெயங்கொண்டம்<br>பெரம்பலூர் | சிதம்பரம்<br>பெரம்பலூர் |
| 12 | 14.04.2024 ஞாயிறு | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | துறையூர்<br>திருச்சி | பெரம்பலூர்<br>திருச்சி |
| 13 | 15.04.2024 திங்கள் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | மயிலாடுதுறை<br>நாகப்பட்டினம் | மயிலாடுதுறை<br>நாகப்பட்டினம் |
| 14 | 16.04.2024 செவ்வாய் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | அறந்தாங்கி<br>பேராவூரணி | இராமநாதபுரம்<br>தஞ்சாவூர் |
| 15 | 17.04.2024 புதன் | மாலை 3 மணி | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |

சிறப்புரை:

திராவிடர் கழகத் தலைவர் **ஆசிரியர் கி.வீரமணி** அவர்கள்,

முனைவர் **துரை.சந்திரசேகரன்**, திராவிடர் கழகப் பொதுச்செயலாளர்

பயண ஒருங்கிணைப்பாளர்கள்:

ஆலோசகர்: **கலி.பூங்குன்றன்**, திராவிடர் கழகத் துணைத் தலைவர்

**வீ.அன்புராஜ்**, திராவிடர் கழகப் பொதுச்செயலாளர்

**இரா.ஜெயக்குமார்**, திராவிடர் கழக மாநில ஒருங்கிணைப்பாளர்

**இரா.குணசேகரன்**, திராவிடர் கழக மாநில ஒருங்கிணைப்பாளர்

**பேரா.ப.சுப்ரமணியன்**, பெரியார் வீர விளையாட்டு திராவிடர் கழக மாநிலத் தலைவர்



ஈரோடு மக்களவைத் தொகுதி உறுப்பினர் கணேசமூர்த்தி உடல்நலக்குறைவு காரணமாக தனியார் மருத்துவமனையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில், மாரடைப்பு காரணமாக அவர் நேற்று முன்தினம் மறைவெய்தினார். ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறை வட்டத்தில் உள்ள அவரது இல்லத்திற்கு, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி நேரில் சென்று அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

### பா.ஜ.க. பெரிய ஸ்டிக்கர் ஒட்டும் கட்சி - அ.தி.மு.க. சின்ன ஸ்டிக்கர் ஒட்டும் கட்சி!

# இந்த இரண்டு ஸ்டிக்கர்களும் தேர்தலுக்குப் பிறகு ஒட்டிக்கொள்ளும்!

## துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி பேச்சு!



திருப்பூர், மார்ச் 30 - திருப்பூர் தெற்கு மாவட்டம், வெள்ளக்கோவிலில் நடந்த தேர்தல் பிரச்சாரத்தில் என்றைக்காவது மோடியைப் பற்றி எடப்பாடி ஒரு வார்த்தை பேசி இருப்பாரா? ஏனெனில் பாஜக பெரிய ஸ்டிக்கர் ஒட்டும் கட்சி, அ.தி.மு.க. சின்ன ஸ்டிக்கர் ஒட்டும் கட்சியாக இருக்கிறது. இந்த இதாண்டு ஸ்டிக்க ர்களும் தேர்தலுக்கு பிறகு ஒட்டிக்கொள்ளும் என கழக துணை பொதுச் செயலாளர், கனிமொழி கருணாநிதி கூறினார்.

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் தலைமையிலான 'இந்தியா' கூட்டணியின் ஈரோடு நாடாளுமன்ற தொகுதி கழக வேட்பாளர், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷை ஆதரித்து கழக துணை பொதுச் செயலாளர், நாடாளுமன்ற குழுத்தலைவர் கனிமொழி கருணாநிதி வெள்ளக்கோவில் கடைவீதி பகுதியில் திறந்த வேனில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ். திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், துணை செயலாளர்கள் ராசி கே.ஆர்.முத்துக்குமார், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பிரபாவதி பெரியசாமி, நகர கழகச் செயலா ளர்கள் சபரி எஸ்.முருகானந்தம் வெள்ளக்கோவில், வசந்தம் நா.சேமலை யப்பன் காங்கேயம், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.சந்திரசேகரன் வெள்ளக்கோவில், சிவ.செந்தில்குமார் குண்டடம் கிழக்கு, கே.கே.சிவா னந்தன் காங்கேயம் தெற்கு, சி.கருணை பிரகாஷ் காங்கேயம் வடக்கு, எஸ்.ஆர்.எஸ். செல்வம் (எ) தமிழ்ச்செல்வன் சென்னிமலை மேற்கு, சி.பிரபு சென்னிமலை கிழக்கு உள்பட மாவட்ட., ஒன்றிய, நகர, பேரூர், வட்டக் கழக, கிளை கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

பிரச்சாரத்தில் கனிமொழி கருணாநிதி பேசியதாவது :

தமிழ்ல கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்தியா கூட்டணியின் ஈரோடு நாடாளுமன்ற தொகுதி கழக வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள இ.கே.பிரகாஷ் திராவிட இயக்க பரம்பரையில் இருந்து வந்தவர். அவருடைய தந்தை 50 ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளை செயலாளராக உள்ளார். அந்த வழியில் வந்தவர் தான் இவர், வேட்பாளராக அறிவிப்பதற்கு முன்பாக ஈரோடு தொகுதியில் அதிகமாக கேன்சர் வரக் கூடிய அபாயம் உள்ளதால் ஈரோடு தொகுதிக்கு புற்றுநோய்க்கு தனிப்பிரிவு வேண்டுமென தேர்தல் அறிக்கையின் போது தெரிவித்தார். அதை தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சேர்த்துள்ளார். தி.மு.க. தேர்தல் அறிக்கையில் வந்தது நிச்சயமாக நிறைவேற்றப்படும். டெல்லியில் விவசாயிகள் போராட்டத்தில் ஒரு அமைச்சரின் மகன், விவசாயிகள் மீது காரை ஏற்றி நான்கு பேரை கொலை செய்த கொடுமையும் நடந்தது. உழைக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு எதிரான சட்டங்கள் என அனைத்தையும் கொண்டு வந்தது. சிறுபான்மையினருக்கு எதிரான சி.ஏ.ஏ. சட்டம் எல்லாவற்றையும் கொண்டு வந்தது மோடியின் பா.ஜ.க. ஆட்சி தான், இதற்கெல்லாம் ஆதரித்து வாக்களித்தது அப்போதைய எடப்பாடி பழனிச்சாமி ஆட்சி. தற்போது நல்லவர் போல தனியாக இருப்பது போன்று ஓட்டு கேட்கிறார். இன்றைய வரைக்கும் தேர்தல் பிரச்சாரத்தில் என்றைக்காவது மோடியை பற்றி ஒரு வார்த்தை பேசி இருப்பாரா? ஏனெனில் பாஜக பெரிய ஸ்டிக்கர் ஒட்டும் கட்சி, அ.தி..மு.க சின்ன ஸ்டிக்கர் ஒட்டும் கட்சி. இந்த இரண்டு ஸ்டிக்கர்களும் தேர்தலுக்கு பிறகு ஒட்டிக் கொள்ளும். அதனால் அவர்களை நம்பி வாக்களிக்க கூடாது. மத்தியில் பாஜக ஆட்சி அமைந்ததும் 15 லட்சம் வங்கி கணக்கில் போடுவதாக சொன்னார்கள். ஆனால் வரவில்லை. ஆனால் வங்கி கணக்கில் மினிமம் பேலன்ஸ் இல்லை என்றாலும் கூட அந்த பணத்தையும் எடுத்துக் கொண்டு விட்டார்கள். ஆயிரம். ஐநூறு செல்லாது என்றார்கள். பின்பு 2000 நோட்டு செல்லாது என்றார்கள். இப்படி கோமாளித்தனமான ஆட்சியை நடத்தி கொண்டுள்ளனர்.

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் ஸ்டாலின் அவர்கள் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி தமிழகத்தை முன்னணி மாநிலமாக மாற்றி காட்டியுள்ளார். தேர்தல் அறிவிப்பில் கூறிய படி மகளிர் உரிமைத் தொகை ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது. இன்று வரை 1கோடியே 15 லட்சம் மகளிருக்கு உரிமை தொகை வழங்கப்பட்டு இருக்கிறது. தமிழ்நாட்டின் மீது அக்கறையும் மரியாதையும் உள்ள ஆட்சி மத்தியில் வர வேண்டும். பா.ஜ..கவில் பெண்களுக்கு பாதுகாப்பு இருக்காது. அதனால் இந்தியா கூட்டணிக்கு நீங்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும் .

இவ்வாறு கனிமொழி கருணாநிதி பேசினார்.

---

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து வாகை சந்திரசேகர் தேர்தல் பிரச்சார சுற்றுப் பயணம்! (திருத்தப்பட்டது)

### தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்-19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலை யொட்டி, கழக கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 01-04-2024 | - | திருநெல்வேலி |
| 02-04-2024 | - | கன்னியாகுமரி |
| 03-04-2024 | - | தூத்துக்குடி |
| 04-04-2024 | - | தென்காசி |
| 05-04-2024 | - | விருதுநகர் |
| 06-04-2024 | - | தேனி |
| 07-04-2024 | - | மதுரை |
| 08-04-2024 | - | இராமநாதபுரம் |
| 09-04-2024 | - | இராமநாதபுரம் |
| 10-04-2024 | - | சிவகங்கை |
| 11-04-2024 | - | தஞ்சாவூர் |
| 12-04-2024 | - | பெரம்பலூர் |
| 13-04-2024 | - | சேலம் |
| 14-04-2024 | - | நாமக்கல் |
| 15-04-2024 | - | ஈரோடு |
| 16-04-2024 | - | கோயம்புத்தூர் |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட மாவட்டக்கழகச்செயலாளர்கள்தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"** சென்னை - 18 நாள்- 29.3.2024

**தலைமைக் கழகம்** தி.மு.க.

---





நெய்வேலி என்.எல்.சி தொ.மு.ச அலுவலகத்தில் நிர்வாகக்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தொ.மு.ச தலைவர் பா.திருமாவளவன் தலைமை தாங்கினார். பொதுச்செயலாளர் என்.பாரி முன்னிலை வகித்தார். பொருளாளர் ஆர்.ஐயப்பன் வரவேற்புரையாற்றினார். நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா .இராஜேந்திரன், தொகுதி பொறுப்பாளர் சுபா. சந்திரசேகர் சிறப்புரையாற்றினர். இந்நிகழ்வில் தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் சா.இராசவன்னியன், மாவட்டப் பொருளாளர் ஜி.தண்டபாணி, நெய்வேலி நகரச் செயலாளர் வி.குருநாதன், பொதுக்குழு உறுப்பினர் பொ.புகழேந்தி, முன்னாள் நகர செயலாளர் வி.பக்கிரிசாமி, அவைத்தலைவர் நன்மாற பாண்டியன்,நகர பொருளாளர் மதியழகன், துணைச் செயலாளர்கள் கருப்பன், செந்தமிழ்ச்செல்வன், மாவட்ட பிரதிநிதி ரவிச்சந்திரன், நாசர், இளங்கோ, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜேஷ், நகர இளைஞரணி ஸ்டாலின், மாவட்ட தொண்டரணி துணைத் தலைவர் ஸ்டாலின், தொ.மு.ச. துணை தலைவர்கள், பகுதி செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர்.

---





ஆத்தூர் கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராம ஊராட்சிகளில் தி.மு.க. மாநில துணைப்பொதுச்செயலாளர் ஐ.பெரியசாமி, திண்டுக்கல் நாடாளுமன்ற தொகுதியில் சி.பி.எம். கட்சி சார்பாக போட்டியிடும் வெற்றி வேட்பாளர் சச்சிதானந்தத்துடன் தீவிரமாக பிரச்சாரம் செய்து வாக்குகள் சேகரித்தார். கிராமங்களில் வறுமையை ஒழித்த 100நாள் வேலை திட்டம் தொடர்ந்து கிடைக்க அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என பேசினார். அருகில் ஒன்றிய செயலாளர் முருகேசன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



திருச்சி நாடாளுமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி வேட்பாளர் துரை வைகோ நேற்று மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவாவை மரியாதை நிமித்தமாகச் சந்தித்து வாக்குச் சேகரித்தார்.

---

### பெரம்பலூர் தொகுதி வேட்பாளர் அருண் நேருவை ஆதரித்து

# மண்ணச்சநல்லூர் ஒன்றியத்தில் அமைச்சர் கே.என்.நேரு பிரச்சாரம்!

## காடுவெட்டி தியாகராஜன் – கழகத்தினர் பங்கேற்பு!

திருச்சி, மார்ச் 30 - பெரம்பலூர் பாராளுமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளர் கே.என். அருண்நேருவை ஆதரித்து மண்ணச்சநல்லூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட பூனாம் பாளையம் கிராமத்தில் திரண்டிருந்த பொதுமக்களிடம் கே.என்.நேரு பேசினார். வட்ட செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து வேட்பாளர் அருண் நேரு பூனாம்பாளையத்தில் முதல் பிரசாரம் ஆரம்பித்து ராசம்பாளையம்,சாலக்காடு, அய்யம்பாளையம், தத்தமங்கலம், தளுதாளப்பட்டி, கீழப்பட்டி, சிறுகுடி, ஓமாந்தூர், வீராணி, சாலப்பட்டி, திருவெள்ளறை கடைவீதி, தில்லாம்பட்டி, தீராம்பாளை யம், திருப்பைஞ்சீலி, கவுண்டம்பட்டி கீழூர், முவராயம்பாளையம் கீழூர், முவராயம்பாளையம் மேலூர், கவுண்டம்பட்டி மேலூர் , வாழ்மானபாளையம் கீழூர், வாழ்மானபாளையம் மேலூர், தெற்கியூர் உள்ளிட்ட கிராமங்களில் மண்ணச்சநல்லூர் எம்.எல்.ஏ. கதிரவன், ஒன்றிய சேர்மன் ஸ்ரீதர் ஒன்றியச் செயலாளர்கள் இளங்கோவன் வக்கீல் செந்தில் கே.பி.ஏ. செந்தில், கருணை ராஜா மாத்தூர் கருப்பைய ஆகியோருடன் சென்று உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.

மேலும் தி.மு.க. செயலாளர்கள், தொண்டர்கள் ஆகியோரும் அருண் நேருவுக்கு ஆதரவாக வாக்குகள் சேகரித்தனர்.

நிகழ்ச்சியில் விடுதலை சிறுத்தைகள் கட்சி, இடது கம்யூனிஸ்ட், வலது கம்யூனிஸ்ட் கட்சி, மனிதநேய மக்கள் கட்சி, கொங்குநாடு மக்கள் கட்சி, அகில இந்திய தொழிலாளர் கட்சி, மனித நேய ஜனநாயக கட்சி நிர்வாகிகள் மற்றும் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் , பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட துணைச் = செயலாளர்கள், மாவட்ட பொருளாளர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் தொண்டர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

### இந்தியா கூட்டணிக்கு

# தமிழ்நாடு கேபிள் டி.வி. உரிமையாளர்கள் சங்கம் ஆதரவு!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதியைச் சந்தித்து தெரிவித்தனர்!

சென்னை, மார்ச் 30- நாடாளுமன்றத் தேர்தல் - 2024-இல்'தமிழ்நாடு கேபிள் டிவி உரிமையாளர்கள் சங்கம்' மாநில பொதுச்செயலாளர் தஞ்சை கோ.ஜீவா மற்றும் நிர்வாகிகள் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இது குறித்த விவரம் வருமாறு:-

'தமிழ்நாடு கேபிள் டிவி உரிமையாளர்கள் சங்கம்' மாநில பொதுச் செயலாளர் தஞ்சை கோ.ஜீவா மற்றும் நிர்வாகிகள், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்களை சந்தித்து, நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாகவும், கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற தங்கள் சங்க நிர்வாகிகள் பாடுபடுவதோடு, தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவதாகவும் உறுதி அளித்தனர்.

---

### கழக வேட்பாளர் தரணி வேந்தனை ஆதரித்து மயிலம் தொகுதி ஒலக்கூர் மேற்கு ஒன்றியத்தில்

# அமைச்சர் செஞ்சி மஸ்தான் நூதன முறையில் வாக்குச் சேகரித்தார்!

திண்டிவனம், மார்ச் 30 ஆரணி நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மயிலம் சட்டமன்றத் தொகுதியில் 'இந்தியா' கூட்டணி திமுக சார்பில் தரணிவேந்தன் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறார். இவரை ஆதரித்துசிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஒலக்கூர் மேற்கு ஒன்றியம் மாம்பாக்கம், செம்பாக்கம், மேல் சிவிரி, ஆத்திப்பாக்கம், வெள்ளிமேடு பேட்டை உள்ளிட்ட ஊராட்சிகளில் உதய சூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார்.

அப்போது வெள்ளி மேடு பேட்டையில் வாக்கு சேகரித்த அமைச்சர் செஞ்சி மஸ்தான் அப்பகுதியில் உள்ள டீக்கடையில் பொதுமக்களுக்கு

டீ போட்டுகொடுத்தும், போன்டா சுட்டுகொடுத்தும்நூதன முறையில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

தொடர்ந்து வெள்ளி மேடு பேட்டை பஜார் வீதியில் உள்ள கடைகள் மற்றும் பொது மக்களிடம் உதயசூரியன்சின்னத்துக்கு வாக்கு கேட்டு முதல மைச்சரின் சாதனைகள் எடுத்து கூறிமுதலமைச்சர் செய்த சாதனைகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை வழங்கி தி.மு.க. வேட்பாளர் தரணி வேந்தனை வெற்றி பெற செய்ய வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

முன்னதாக மாம்பாக்கம், செம்பாக்கம், ஆத்திப்பாக்கம், மேல் சிவிரி உள்ளிட்ட ஊராட்சிகளில் வாக்கு சேகரிக்க சென்ற அமைச்சர் செஞ்சி மஸ்தான், வேட்பாளர் தரணி வேந்தனுக்கு பெண்கள் ஆர்த்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, அவை தலைவர் டாக்டர் சேகர், ஒன்றிய பெருந்தலைவர் சொக்கலிங்கம் ,துணை சேர்மன் ராஜாராமன்,திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன்,ஒன்றிய நிர்வாகிகள் அமராவதி, திருஞான சம்பந்தம் , காளி, ஹரி, காளி, மணி, ஒன்றிய கவுன்சிலர் அண்ணாதுரை,இளைஞரணிஅமைப்பாளர்ஜெயபிரகாஷ், வழக்கறிஞர் அணி கமலக்கண்ணன்,மாம்பாக்கம் கிளை கழக நிர்வாகிகள் வசந்தகுமார் கதிர்வேல் சோமசுந்தரம் மேகவந்தான் தேவராஜ் செம்பாக்கம் ஊராட்சி நிர்வாகிகள் சந்திரபாபு. மகாலிங்கம், ராமலிங்கம், மலையரசன், தங்கமணி, ராஜாராமன், மேல் சிவிரிஊராட்சி நிர்வாகிகள் ஸ்ரீதர், சுரேஷ், அருள்தாஸ், ரஞ்சித், குமார்,வெள்ளி மேடு பேட்டை ஊராட்சி நிர்வாகிகள் கோபாலகிருஷ்ணன், சுப்புராஜ், பாக்கியராஜ், மணிகண்டன், நூருல்ல உள்ளிட்ட தோழமைக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

### என்.கௌதமன் தலைமை! பி.எம்.ஸ்ரீதர் முன்னிலை! நாகை , திருவாரூர்

# மாவட்ட நிர்வாகிகள் - வேட்பாளர் வை.செல்வராஜூடன் சந்திப்பு!

## ப.கோவிந்தராசன், கே.பழனியப்பன், அ.பாரிபாலன் பங்கேற்பு!

நாகை, மார்ச் 30 - நாகை, திருவாருர் மாவட்ட தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் நாகை நாடாளுமன்ற 'இந்தியா' கூட்டணியின் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் வை.செல்வராஜூடன் சந்திப்பு கூட்டம் கீழ்வேளூர் ஒன்றிய தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நாகை மாவட்டக் தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் தலைமை தாங்கினார்.

தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர் முன்னிலை வகித்தார். தகவல் தொழில் நுட்ப அணி நாகை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அ.பாரி பாலன் வரவேற்றார்.

கூட்டத்தில் நாகை நாடாளுமன்ற தொகுதியின் 'இந்தியா' கூட்டணியின் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் வை.செல்வராஜ் சிறப்புரையாற்றினார்.



விழுப்புரம் நாடாளுமன்றத் தொகுதி பிரச்சாரக் கூட்டத்திற்கு வருகை புரிந்த வி.சி.க. தலைவர் தொல். திருமாவளவன் அவர்கள் உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க பொன்முடி அவர்களின் வாகனத்தில் உள்ள பானைச் சின்னத்தைப் பார்த்து புகைப்படம் எடுத்துக் கொண்டார். விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் துரை. இரவிக்குமார் உடனிருந்தார்.



விருதுநகரில் தி.மு.க. சார்பில் அனைத்து தோழமைக் கட்சி கூட்டம் தெற்கு மாவட்ட தி.மு.க.செயலாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், வடக்கு மாவட்ட தி.மு.க.செயலாளர் தங்கம் தென்னரசு, மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் மூர்த்தி, மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் மணிமாறன், விருதுநகர் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், சிவகாசி சட்டமன்ற உறுப்பினர்கள் அசோகன், விருதுநகர் நாடாளுமன்ற காங்கிரஸ் வேட்பாளர் மாணிக்கம் தாகூர் மற்றும் தி.மு.க. கூட்டணியைச் சேர்ந்த அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

### 24 மணி நேரமும் உழைத்துக் கொண்டிருக்கும்

# முதல்வரின் சாதனைகளை மக்களிடம் கொண்டு செல்லுங்கள்!

## செஞ்சி செயல்வீரர்கள் கூட்டத்தில் – அமைச்சர் எ.வ.வேலு வேண்டுகோள்!

**செஞ்சி , மார்ச் 30 -**

**“24 மணி நேரமும் உழைத்துக் கொண்டிருக்கும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சாதனைகளை மக்களிடம் எடுத்துச் செல்லுங்கள்” என்று அமைச்சர் எ.வ.வேலு செஞ்சியில் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் கூறினார்.**

விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஆரணி நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட செஞ்சி சட்டமன்ற தொகுதி இந்தியா கூட்டணி சார்பில் செயல் வீரர்கள் கூட்டம் செஞ்சி ஒன்றியம் செம்மேடு ஊராட்சி வெற்றி வேலன் நகரில் நடைபெற்றது. கூட்டத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமை தாங்கினார்.

செஞ்சி ஒன்றிய பெருந் தலைவர் ,செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் விஜய குமார் அனைவரும் வரவேற்றார். மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளரும் செயற்குழு உறுப்பினர் நெடுஞ்செழியன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஆரணி நாடாளுமன்றத் தொகுதியில் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் திமுக கழக வேட்பாளர் தரணிவேந்தனை அறிமுகம் செய்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.

இந்த கூட்டத்தில் அமைச்சர் எ.வ. வேலு பேசியதாவது:

இத்தேர்தல் ஜனநாயகத்திற்கும் பாசிசத்திற்கும் நடக்கும் தேர்தல் அல்ல போர். இத்தேர்தல் சமூகநீதிக்கும், மனுநீதிக்கும் நடைபெறும் தேர்தல் பிறப்பை வைத்து வேறுபடுத்துவது மனுநீதி. ஆனால் சமூக நீதி பெரியாரின் கொள்கையோடு நாம் ஆட்சி செய்வதாகும்.

**பெண்களுக்கு மாதம் ரூ.888 சேமிப்பு!**

24 மணி நேரமும் உழைத்துக்கொண்டுள்ள நம் முதல்வரின் சாதனைகளை பாருங்கள். புதுமைப்பெண் திட்டம் மிக சிறப்பான திட்டம். எங்கு பார்த்தாலும் தற்போது பெண்கள் நிறைந்துள்ளனர். சமூகத்தில் ஆணுக்கு கிடைக்கும் சுதந்திரம் பெண்ணுக்கு மறுக்கப்பட்டதால் அவர்கள் முன்னேற புதுமை ப்பெண்திட்டம் உருவானது. விடியல் பயணம் என்றால் பிங்க் கலர். மாதம் 888 ரூபாய் பெண்களுக்கு சேமிப்பு கிடைக்கிறது.

10.5 சதவீத இட ஒதுக்கீடுக்கு நாங்கள் எதிரி அல்ல. இதை அமல்படுத்தினால் வன்னிய மக்களுக்குதான் நஷ்டம், பள்ளிக்கல்லூரிகளில் 37 சதவீதத்தினர் படித்து வருகின்றனர். மாவட்டத்தில் உள்ள நியாய விலைக்கடைகளில் 40 சதவீதம் வன்னியர்களாக உள்ளனர். இதே போல அனைத்து துறைகளில் இட ஒதுக்கீடு சதவீதத்திற்கு மேல் வன்னியர்கள் இடம்பெற்றுள்ளனர். இதையெல்லாம் கணக்கெடுத்து பார்த்துளோம்

**கல்வி உரிமைகளை பறித்த மோடி!**

மேலும் குஜராத்தில் பிர



தமர் மோடி பலமுறை முதல்வராக இருந்துள்ளார். அவர் பிரதமராக பதவியேற்றவுடன் மாநில உரிமைகளுக்கு மரியாதை கொடுப்பார் என்று நம்பினோம். ஆனால் மாநில உரிமையில் இருந்ததை நீட் தேர்வை கொண்டுவந்தார்.

கல்வி உரிமைகளை பறித்தார்.10 ஆண்டுகால ஆட்சி ட்ரைலர் என்கிறார். ரூ. 400 விற்ற சமையல் எரிவாயு இப்போது ரூ. 900. அடுத்து பாஜக ஆட்சிக்கு வந்தால் அது 3 மடங்கு உயர்ந்துவிடும்.மாநில அரசு கட்டுப்பாட்டில் வாட் வரி இருந்ததால் விலைவாசி குறைவாக இருந்தது. விலையேற்ற த்திற்கு ஜி. எஸ்.டி.தான் காரணம் என அமைச்சர் எ.வ. வேலு பேசினார்.

இதில் திமுக தலைமைக் கழக தொகுதி பொறுப்பாளர் அன்பழகன், செஞ்சி தொகுதி பொறுப்பாளரும் தலைமை பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாநில விவசாய அணி இணை செயலாளர் செந்தமிழ் செல்வன், மாநில காங்கிரஸ் கட்சியின் துணை தலைவர் ரங்க பூபதி, மதிமுக மாநில துணை பொது செயலாளர் ஏ. கே. மணி, விழுப்புரம் மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவர் ஆர். பி. ரமேஷ், சி.பி.எம். கட்சியின் விழுப்புரம் மாவட்ட செயலாளர் ராமமூர்த்தி, சி.பி.ஐ .கட்சியின் விழுப்புரம் மாவட்ட செயலாளர் சரவணன்,

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் வடக்கு மாவட்ட செயலாளர் தனஞ்செழியன், ஆரணி நாடாளுமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் நன்மாறன்,விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட துணை செயலாளர் துரை சங்கர் ,மாவட்ட அமைப்பாளர் செஞ்சி அரசு ,இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் கௌரவ தலைவர் சையத் மஸ்ஜித் பாபு, மதிமுக மாவட்ட செயலாளர் பாபு கோவிந்தராஜ் ,தாமுமுக மாநில செயலாளர் முஸ்தாக்கின்,மனிதநேய மக்கள் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர்சையத் உஸ்மான்,தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் மாவட்ட செயலாளர் கோபாலன், செஞ்சி தொகுதி பொறுப்பாளர் ராசநாயகம்,மக்கள் நீதி மையக் கட்சியின் வடக்கு மண்டலசெயலாளர் ஸ்ரீபதி,கம்யூனிஸ்ட் கட்சியின் வட்ட செயலாளர் கலியமூர்த்தி, இன்ப ஒலி, ராஜேந்திரன், சுப்ரமணி, குமார், திமுக பொதுக்குழு உறுப்பினர் செல்வராஜ்

ஒன்றிய செயலாளர்கள் விஜயராகவன் நாராயணமூர்த்தி சாந்தி சுப்பிரமணியன் செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் , அனந்தபுரம் நகர செயலாளர் சம்பத் முன்னாள் செஞ்சிநகர செயலாளர் காஜா நசீர் அனந்தபுரம்நகர மன்ற தலைவர் முருகன், ஒன்றிய துணைசேர்மன் கள்ஜெயபாலன், மேல்மலையனூர் விஜயலட்சுமி முருகன், மாவட்ட கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை, அகிலா பார்த்திபன், செல்வி ராமசரவணன்,செஞ்சி பேரூராட்சி மன்ற துணை தலைவர் ராஜலட்சுமி செயல்மணி, அனந்தபுரம் பேரூராட்சி மன்ற துணை தலைவர் அமுதா கல்யாண்குமார் ,மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ்சேரிகணேசன்,

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், மருத்துவ அணி அமைப்பாளர் சக்தி பிரியன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் தமிழரசன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரசன்னா, மாவட்டம் மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி விஜயகுமார் உள்ளிட்ட மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கிளை கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன் நன்றி கூறினார்.

### அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை! கே.கே.செல்லப் பாண்டியன் வரவேற்புரை!

# கரூர் வேட்பாளர் ஜோதிமணியை ஆதரித்து இலுப்பூரில் செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி - சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!

புதுக்கோட்டை, மார்ச் 30-

‘இந்தியா’ கூட்டணியின் கரூர் நாடாளுமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் ஜோதிமணியை ஆதரித்து, புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் இலுப்பூரில் மாநாடு போல் சிறப்புடன் நடைபெற்றது.

மாவட்டக் கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன் அனைவரையும் வரவேற்று ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளருமான எஸ்.ரகுபதி தலைமையிலும், பள்ளிக் கல்வித்துறை அமைச்சரும், திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி,

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் சட்டமன்ற உறுப்பினர் எம். சின்னதுரை, தஞ்சாவூர் மாநகராட்சி துணை மேயர், விராலிமலை தொகுதி மேற்பார்வையாளர் அஞ்சுகம் பூபதி, காங்கிரஸ் தேர்தல் பொறுப்பாளர் ஆர்.எம்.பழனிச்சாமி, பெரியண்ணன் அரசு, காங்கிரஸ் மாவட்ட தலைவர் முருகேசன், இந்திய கம்யூனிஸ்ட் மாவட்ட செயலாளர் செங்கோடன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட தலைவர் அஸ்ரப் அலி, மனித நேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் அப்துல் கனி, விடுதலைச் சிறுத்தைகள் மாவட்ட செயலாளர் கரு.வெள்ளை நெஞ்சன், பெனர்ட் அந்தோணிராஜ், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், த.சந்திரசேகரன், செ. அசோக் பாண்டியன், கே.ஆர்.என். போஸ், அரு.வீரமணி, ஆ.செந்தில், க.மதியழகன், பி.ராஜேஸ்வரி, எஸ்.எஸ். கருப்பையா, , எம்.லியாகத் அலி, மு.பி.மணி, சு.சண்முகம், எம்.எம்.பாலு, தென்னலூர் எம்.பழனியப்பன், ராப்பூசல் செந்தில், ஒன்றியக் கழக செயலாளர்கள் மு.பி.ம.சத்தியசீலன், ஆர். ஆர்.எஸ்.மாரிமுத்து, அ. இளங்குமரன், கே.பி.ஐயப்பன், ஓ.எஸ். வெங்கடாசலம், வை.விஜயகுமார், முகமது ரிஷா, குமார், பூங்குடி சிவா, மாவட்ட கவுன்சிலர்கள் துவாரவயல் த.செல்வம், சாந்தி தங்கசிங்கம், கை. பழனிச்சாமி, முனைவர் குறிஞ்சிவாணன், அ. பிரபா, கே.எஸ். ச.இளைய சூரியன், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், பொன். பாரிவள்ளல், மு.கலைஞர் கருணாநிதி,

விளாப்பட்டி சிவா, ஆ. ராஜேந்திர சோழன், சுகி (எ) சுகுமாறன், கே.ஆர். பாலமுத்து, சாங்கிராப்பட்டி ரவி, குளத்தூர் மணி ராஜன், சுந்தர்ராஜ், ஓ.ஆறுமுகம், தமிழினியன், சின்னத்துரை, எழில்ராஜா, சண்முகம். ராஜா, சிவா, கிட்டு, ராஜா, மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளிட்ட மாநில மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள்,கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் என பத்தாயிரத்திற்க்கும் மேற்பட்டோர் திரளாக கலந்து கொண்டனர். முடிவில் அன்னவாசல் தெற்கு ஒன்றிய செயலாளர் கே. எஸ் சந்திரன் நன்றி கூறினார்.

### தலைமை இல.பத்மநாபன், வரவேற்புரை வசந்தம் நா.சேமலையப்பன்

# ஈரோடு நாடாளுமன்றத் தொகுதி - காங்கேயம் சட்டமன்றத் தொகுதி பணிமனை!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் திறந்து வைத்தனர்!

திருப்பூர், மார்ச் 30-

திருப்பூர் தெற்கு மாவட்டம், காங்கயம் பழைய கோட்டை ரோடு பகுதியில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ‘இந்தியா’ கூட்டணியின் ஈரோடு நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட காங்கேயம் சட்டமன்ற தொகுதி தேர்தல் பணிமனையை திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில், காங்கேயம் நகர கழக செயலாளர் வசந்தம் நா. சேமலையப்பன் வரவேற்புரையில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என். கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திறந்து வைத்து மேடையில் வைக்கப்பட்டிருந்த தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தி கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற தொகுதி கழக வேட்பாளர் கே.இ.பிரகாஷை அறிமுகம் செய்து வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் காங்கயம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் சேலம் உமாராணி, திருப்பூர் வடக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் ப.கோபி, மாவட்ட துணைச் செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.கே.சிவானந்தன் காங்கேயம் தெற்கு, கருணை பிரகாஷ் காங்கேயம் வடக்கு, சிவ.செந்தில்குமார் குண்டடம் கிழக்கு, கே.சந்திரசேகரன் வெள்ளக்கோவில், எஸ்.ஆர்.எஸ்.செல்வம் (எ) தமிழ்செல்வன் சென்னிமலை மேற்கு, சி.பிரபு சென்னிமலை கிழக்கு,

வெள்ளக்கோவில் நகர கழக செயலாளர் சபரி எஸ்.முருகானந்தம், பொதுக்குழு உறுப்பினர் கே.எஸ்.கார்த்திகேயன், மதிமுக மாவட்ட செயலாளர் புத்தரச்சல் மணி, காங்கேயம் நகர்மன்ற தலைவர் சூர்ய பிரகாஷ், மாவட்ட கவுன்சிலர் கிருஷ்ணவேணி வரதராஜ், இளைஞர் அணி செந்தில்குமார், சக்தி வடிவேல், காங்கேயம் ஒன்றிய கவுன்சிலர்கள் ரவி, செல்வம் ராமசாமி, காங்கிரஸ் கட்சி காங்கேயம் நகர தலைவர் சிபகத்துல்லா உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்

**ஊத்தங்கரை தெற்கு ஒன்றியம்**

**ஊத்தங்கரை பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்**

தலைமைக் கழக அறிவிப்பு

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், ஊத்தங்கரை தெற்கு ஒன்றியம், ஊத்தங்கரை பேரூர்ச் செயலாளர் இரா.பாபு சிவகுமார் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **ஆர்.பி.பார்த்திபன்**, (ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி மாவட்டம்) அவர்கள் ஊத்தங்கரை பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| | |
|---|---|
| **“அண்ணா அறிவாலயம்”** | **துரைமுருகன்** |
| சென்னை - 18 | பொதுச் செயலாளர் |
| நாள்- 29-03-2024 | தி.மு.க. |

---

### தலைமை இல.பத்மநாபன், வரவேற்புரை எஸ்.முருகானந்தம் எஸ்.வி.செந்தில்குமார்

# ஈரோடு நாடாளுமன்றத் தொகுதி - தாராபுரம் சட்டமன்றத் தொகுதி கழக செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் என்.கயல்விழி செல்வராஜ் பங்கேற்றனர்!

ஈரோடு, மார்ச் 30-

ஈரோடு நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட தாராபுரம் சட்டமன்ற தொகுதி, கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்தியா கூட்டணியின் தேர்தல் அலுவலக பணிமனை திறப்பு விழா மற்றும் வேட்பாளர் அறிமுக செயல் வீரர்கள் கூட்டம் தாராபுரம் மத்திய பேருந்து நிலையம் அருகே புதிய வீட்டு வசதி வாரிய வளாகத்தில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில், தாராபுரம் நகர கழக செயலாளர், நகர்மன்ற உறுப்பினர் எஸ். முருகானந்தம், தாராபுரம் ஒன்றிய கழக செயலாளர், ஒன்றியக்குழு பெருந்தலைவர் எஸ்.வி.செந்தில்குமார் ஆகியோர் வரவேற்புரையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணி கழக வேட்பாளர் இ.கே.பிரகாஷ் ஆகியோர் தலைமை தேர்தல் பணிமனையினை திறந்து வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் வேட்பாளரை அறிமுகம் செய்து வைத்து சிறப்புரையாற்றினர்.

இதில் தாராபுரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் கோட்டை அப்பாஸ், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் எஸ்.கார்த்திக், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், மாவட்ட துணைச் செயலாளர்கள் ராசி கே.ஆர்.முத்துக்குமார், தாராபுரம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பிரபாவதி பெரியசாமி, ஒன்றியக் கழக செயலாளர்கள் குண்டடம் ஒன்றியக்குழு உறுப்பினர் எஸ்.சந்திரசேகரன், மூலனூர் ஒன்றியக் குழு துணைத் தலைவர் ப. பழனிச்சாமி, துரை தமிழரசு, பேரூர் கழக செயலாளர்கள் கொளத்துப்பாளையம் பேரூராட்சி துணைத் தலைவர் கே.கே.துரைசாமி, மூலனூர் பேரூராட்சி தலைவர் க.தெண்டபாணி, கன்னிவாடி வார்டு உறுப்பினர் கோ.சுரேஷ், ருத்ராவதி செ.அன்பரசு, சின்னக்காம்பாளையம் ரா.பன்னீர் செல்வம், பொதுக்குழு உறுப்பினர் கே.எஸ்.கருணாகரன், தாராபுரம் நகர்மன்ற தலைவர் கு.பாப்புகண்ணன், காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் தென்னரசு. கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி மாவட்ட செயலாளர் நந்தகுமார், ஆதித்தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் ஆறுச்சாமி, கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்க தலைவர் காளிமுத்து, ஆதித்தமிழர் பேரவை ரவிக்குமார், மனிதநேய ஜனநாயக கட்சி மாவட்ட பொறுப்பாளர் முஜிபுர் ரஹ்மான், மக்கள் நீதிமன்ற மாவட்ட செயலாளர் ஆர்எம்எஸ் ராஜா, மதிமுக மாவட்ட செயலாளர் மணி, விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட தலைவர் மின்னல், இந்திய கம்யூனிஸ்ட் மாவட்ட செயலாளர் ரகுபதி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் சரஸ்வதி ராஜேந்திரன், காளிமுத்து, நகர அவைத் தலைவர் ப. கதிரவன், துணை செயலாளர்கள் கமலக்கண்ணன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சன் பாலு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர்கள் ஹைடெக் அன்பழகன், ஆனந்தி உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர, வட்டக் கழக, கிளை கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க.வேட்பாளர் கே.என்.அருண்நேரு, பெரம்பலூர் ஒன்றியத்திற்குட்பட்ட கவுல்பாளையம் கிராமத்தில் பொதுமக்களிடம் வீதி, வீதியாகச் சென்று வாக்குகள் சேகரித்தார். அப்போது, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதி வி.சி.க. வேட்பாளர் துரை.ரவிக்குமாரை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்டார். அருகில் உயர் கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி, சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் எஸ்.சுரேஷ் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள், 'இந்தியா' கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடன் உள்ளனர்.




நீலகிரி நாடாளுமன்றத் தொகுதி 'இந்தியா' கூட்டணி செயல்வீரர்கள் கூட்டம் கோவை கூடலூர் நகராட்சி பகுதியில் நடைபெற்றது. இதில் நீலகிரி நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் ஆ.இராசா கலந்துகொண்டு உரையாற்றினார்/ தொண்டாமுத்தூர் ரவி தலைமையில், கூடலூர் நகர செயலாளர் அரிவரசு வரவேற்றார். மாவட்ட அவைத்தலைவர் புருஷோத்தமன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி ஆர்.சண்முகசுந்தரம், வடக்கு மாவட்ட துனைச்செயலாளர் அசோக்ஆறுக்குட்டி,அசரப்அலி,டிபி.சுப்ரமணியம், காரமடை ஒன்றிய செயலாளர்கள் சுரேந்திரன், எஸ் எம் டி.கல்யாணசுந்தரம்,அன்னூர் ஒன்றிய செயலாளர்கள் பழனிச்சாமி, தனபால், நகர செயலாளர்கள் முனுசாமி,முகமது யூனுஸ், வெங்கடேஷ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அக்கீம் ,மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அந்தோணி, மாவட்ட மகளிர் அணி செயலாளர் ரதி மனோகரன் உள்ளிட்ட 'இந்தியா' கூட்டணியின் நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

### "வீழட்டும் பாசிசம்! வெல்லட்டும் ஜனநாயகம்" ஒன்றியத்தில் மலரட்டும்!

# 'திராவிட மாடல் ஆட்சி' என்ற புத்தகத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, மார்ச் 30-

கழக தலைவரும், முதலமைச்சரு மான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.03.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், 2024 பாராளுமன்ற தேர்தலில் பரப்புரை செய்யும் விதமாக தமிழ்நாடு சிறுபான்மை ஆணையத்தின் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் முயற்சியில் தொகுக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பான "வீழட்டும் பாசிசம்! வெல்லட்டும் ஜனநாயகம்" ஒன்றியத்தில் மலரட்டும் திராவிட மாடல் ஆட்சி என்ற புத்தகத்தை வெளியிட்டார்.

"மலரட்டும் ஒன்றியத்தில் திராவிட மாடல் அரசு" என்ற தமிழ்நாடு சிறுபான்மை ஆணையத்தின் தலைவர், சா. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் எழுதியுள்ள முன்னுரையுடன்;

மேற்கு வங்க மாநில முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர், கோ. பாலசந்திரன், (ஓய்வு) அவர்கள் எழுதியுள்ள "மோடியின் எழுச்சியும், ஜனநாயகத்தின் வீழ்ச்சியும்";

ஊடகவியலாளர் திருமாவேலன் அவர்கள் எழுதிய "மோடிசமூக அநீதியின் நாயகன்";

திராவிட முன்னேற்றக் கழக செய்தி தொடர்பாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் அவர்கள் எழுதிய "மாநில உரிமைகளைப் பந்தாடும் பாசிச பா.ஜ.க. அரசு";

தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு பொதுச் செயலாளர், வி.கே.வி. துரைசாமி அவர்கள் எழுதிய "பா.ஜ.க. ஆட்சிக் காலம் விவசாயிகளுக்கான கேடு காலமாக அமைந்தது";

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த வழக்கறிஞரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பி. வில்சன் அவர்கள் எழுதிய "பாரதிய (தீய) ஜனதா கட்சியின் அரசாட்சியில் நாடாளுமன்றத்தின் அவல நிலை";

அகில இந்திய வங்கி அதிகாரிகள் கூட்டமைப்பின் முன்னாள் பொதுச் செயலாளர் தாமஸ் பிராங்கோ அவர்கள் எழுதிய "வங்கித் துறையைச் சீரழித்த மோடி அரசு";

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் மதுக்கூர் இராமலிங்கம் அவர்கள் எழுதிய "மோடி ஊழலை ஒழிக்கவில்லை; ஒளிக்கிறார்";

பொருளாதார நிபுணர் ஆனந்த் சீனிவாசன் அவர்கள் எழுதிய "இந்தியாவில் வரிமுறைகளும், செல்வம் பரவலும்";

ஊடகவியலாளர் செந்தில்வேல், அவர்கள் எழுதிய "பாஜக ஆட்சியும் கேள்விக் குறியாகும் இந்தியப் பாதுகாப்பும்";

பொதுப் பள்ளிக்கான மாநில மேடையின் பொதுச் செயலாளர் பு.பா. பிரின்ஸ் கஜேந்திர பாபு அவர்கள் எழுதிய "மோடி–சமூக அநீதியின் நாயகன்";

மனிதநேய மக்கள் கட்சித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் எம். எச்.ஜவாஹிருல்லா அவர்கள் எழுதிய "மோடி vs இந்திய சிறுபான்மை மக்கள்";

ஊடகவியலாளர் டி.அருள் எழிலன் அவர்கள் எழுதிய "மோடியை அரண் செய்யும் GODI MEDIA";

மகிழன் அவர்கள் எழுதிய "மோடியின் தேர்தல் பத்திரங்கள்: மோசடியும் ஜனநாயக படுகொலையும்";

இளங்கோவன் முத்தையா அவர்கள் எழுதிய "இங்கு ஹிந்து ராஷ்ட்ரம்தான்: அதன் அதிபர் மோடி";

பால்வளத் துறை அமைச்சர் மனோ தங்கராஜ் அவர்கள் எழுதிய "ஊழலின் ஊற்றுக் கண் பா.ஜ.க.";

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் க.கனகராஜ் அவர்கள் எழுதிய "உரிமைகள் பறிபோனால் எதையுமே தக்க வைக்க முடியாது";

"சிறு குறு நிறுவனங்களின் இன்றைய நிலை" குறித்த கட்டுரையும் வெளியாகியுள்ளது.

இப்புத்தக வெளியீட்டு நிகழ்வின்போது நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஆர். இளங்கோவன், மனிதநேய மக்கள் கட்சித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான எம்.ஹெச். ஜவாஹிருல்லா, கழக அமைப்புச் செயலாளர்

ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தித் தொடர்பு செயலாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், கழக சிறுபான்மை நல உரிமைப் பிரிவுச் செயலாளர் சுபேர் கான், ஊடகவியலாளர் செந்தில்வேல் ஆகியோர் உடனிருந்தனர்.

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, தேர்தல் பிரச்சாரம்!

(திருத்தப்பட்டது)



### தலைமைக் கழகம் அறிவிப்பு

2024 ஏப்ரல்–19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, அவர்கள் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|
| 01.04.2024 (திங்கட் கிழமை) | கன்னியாகுமரி<br>திருநெல்வேலி |
| 02.04.2024 (செவ்வாய் கிழமை) | திருநெல்வேலி<br>தென்காசி |
| 04.04.2024(வியாழக் கிழமை) | மதுரை<br>தேனி |
| 08.04.2024 (திங்கட் கிழமை) | சென்னை தெற்கு |

**"அண்ணா அறிவாலயம்"**
*சென்னை-18.*
*29.03.2024*

**தலைமைக் கழகம்,**
*தி.மு.க.*

### மதச்சார்பற்ற 'இந்தியா' கூட்டணி கட்சி சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதி

# வேட்பாளர் கார்த்தி சிதம்பரத்தை ஆதரித்து - திருமயம் ஒன்றிய தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை! முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் சிறப்புரை!

*புதுக்கோட்டை, மார்ச் 30-*

*மதச்சார்பற்ற இந்தியா கூட்டணி கட்சிகளின் சிவகங்கை நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருமயம் ஒன்றிய தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் தமிழக முதல்வர் தளபதியார் அவர்களின் உத்தரவின் பேரில் தமிழக சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளருமான எஸ்.ரகுபதி தலைமையில் நடைபெற்ற சிவகங்கை நாடாளுமன்ற தொகுதி தேர்தல் பணிக்கான ஆலோசனை கூட்டத்தில் முன்னாள் மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் இந்தியா கூட்டணி காங்கிரஸ் வேட்பாளர் கார்த்தி சிதம்பரத்தை அறிமுகம் செய்து சிறப்புரையாற்றினார். அப்பொழுது அவர் பேசியதாவது:*

*புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் சிவகங்கை நாடாளுமன்ற வேட்பாளர் கார்த்தி சிதம்பரத்தை ஆதரித்து நடைபெற்ற காங்கிரஸ் தி.மு.க. கூட்டணி கட்சிகள் செயல்வீரர் கூட்டத்தில் கலந்து கொண்டு முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் பேசியதாவது:*

*உலக வங்கி சொல்கிறது இந்தியாவில் இருக்கிற ஏற்றத்தாழ்வு மாதிரி எந்த நாட்டிலும் கிடையாது. 21 சதவீத மக்கள் வறுமையில் இருப்பதை இந்த மோடி அரசு பாராட்டுகிறது. இந்தியா கூட்டணி என்பது கீழ்பாதி 50% மக்களுக்காக அழைத்தது. மோடி அரசு மேல் பகுதி 10% மக்களுக்காக அமைந்த அரசு இந்திய மக்களுக்கு மிகப்பெரிய சவால் விலைவாசி உயர்வு, வேலையில்லா திண்டாட்டம் சோப்பு ,சீப்பு காலணி வரை விலைவாசி உயர்ந்துள்ளது. இந்தியாவில் பட்டதாரிகள் மத்தியில் வேலை இல்லாதவர்கள் 42% உள்ளனர். தலைமை பொருளாதார ஆலோசகர் வேலை இல்லாமையை கட்டுப்படுத்த அரசால் முடியவில்லை என்பதை போட்டு உடைத்துள்ளார். நிதியமைச்சர் நான் தமிழச்சி என்று சொல்கிறார். வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஏன் இந்த தேர்தலில் போட்டியிடவில்லை.*

*இந்தத் தேர்தலில் போட்டியிட்டு எங்களுக்கு பதில் சொல்லி இருக்க வேண்டும். இந்தியா முழுவதும் 65 ஆயிரம் கோடி விவசாயிகளை அடைத்தது யார்? 100 நாள் வேலை திட்டத்தை அமல்படுத்தி தமிழ்நாட்டில் அமல்படுத்துவதற்காக கையெழுத்திட்டவர் யார்? பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தை நாடு முழுவதும் அமல்படுத்த தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்து கையெழுத்துக்கள் யார்? இந்தியாவிலேயே அதிக வங்கிகள் இருக்கிறது என்றால் அது சிவகங்கை நாடாளுமன்ற தொகுதி கல்வி கடனை கொண்டு வந்தது யார்? காங்கிரஸ் ஆட்சி அமைந்த உடன் கல்வி கடன் பெற்று வேலையில்லாமல் கஷ்டப்பட்டு கல்வி கடனை கட்ட முடியாமல் இருக்கும் மாணவ மாணவிகளுக்கு இனிப்பான செய்தி வர இருக்கிறது.*

*ஜூன் நான்காம் தேதி தேர்தல் முடிவுகள் வரும் போது ஜனநாயகம் இருக்குமா? இருக்காதா? அண்ணல் அம்பேத்கர் கொண்டு வந்த அரசியல் சாசனம் இருக்குமா? செத்துப் போய் விடுமா? அம்பேத்கர் கொண்டு வந்த அரசியல் சாசனம் இருந்தால் தான் இந்த மக்களுக்கு பாதுகாப்பு. மாநில அரசு உரிமை பறிக்கப்படும் காஷ்மீரில் ஏற்பட்ட நிலை தமிழ்நாட்டிற்கு வராது என்று எனன நிச்சயம் உ இந்த தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெற்றால் ஜனநாயகம் பிழைத்திருக்கும்.இல்லையென்றால் மெல்ல மெல்ல சாகும் என்று பேசினார்.*

*இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நாளை நமக்கு வாக்களிக்கும் உரிமை கிடைக்குமா கிடைக்காதா என்று முடிவு செய்யக்கூடிய தேர்தல் தான் இந்த தேர்தல் . ஐடி, சிபிஐ தனது சகாக்களை வைத்துக் கொண்டு பாஜக மிரட்டுகிறது. நாளை ஜனநாயகம் மாறி சர்வாதிகாரம் உருவானால் மீண்டும் ஒரு சுதந்திரப் போராட்டத்தை நடத்த முடியாது என்பதற்காகத்தான் இது ஒரு விடுதலைப் போராட்டம். ஜீலை 4ம் தேதி மீண்டும் ஒரு விடுதலை கிடைக்க வேண்டும். வேட்பாளர் அறிமுகப்படுத்தும் விழாவில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தெரிந்து பேசினாரா தெரியாமல் பேசினாரா என தெரியவில்லை. பெட்ரோல் விலை குறைக்கப்படும். டீசல் விலை குறைக்கப்படும். கேஸ் விலை குறிக்கப்படும் என்று தேர்தல் அறிக்கையை தமிழக முதலமைச்சர் வெளியிட்டிருக்கிறார் என்று கூறுகிறார்.*

*இந்தியா கூட்டணியில் அங்கம் வகிக்கிற தலைவர் தான் அந்த தேர்தல் அறிக்கையினை வெளியிட்டு இருக்கிறார் என்று பேசினார். பின்னர் பேட்டியளித்த முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் த.மா.க.வுக்கு சைக்கிள் சின்னமும் அ.ம.மு.க.வுக்கு குக்கர் சின்னமும் வழங்கப்பட்டது. போல் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு பானை சின்னமும் ம.தி.மு.க. விற்கு பம்பரம் சின்னமும் ஒதுக்கப்படவில்லை இதுகுறித்து நீதி மன்றத்திற்கு சென்று நீதி கேட்க வேண்டும்.*

*பின்னர் இந்த நிகழ்ச்சிகள் கலந்து கொண்ட பின் செய்தியாளர்களை சந்தித்த சிவகங்கை நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் கார்த்தி சிதம்பரம் இந்தியாவில் இரண்டு சட்டம் உள்ளது பிஜேபியுடன் இருந்தால் ஒரு சட்டம். பிஜேபி கூட இருந்தா உங்களுக்கு ஈடி ரைடு வராது. பிஜேபி கூட இருந்தா வருமான வரி சோதனை வராது. பிஜேபி உடன் இருந்தால் நீங்கள் புனிதர்கள் . பிஜேபிக்கு விரோதமாக இருந்தீர்கள் என்றால் ஈடி ரெய்டு வரும். வருமானவரித்துறை ரைடு வரும். உங்களை சிறையில் தள்ளுவார்கள் நீங்க எல்லாம் வந்து பாவம் செய்தவர்கள் . பிஜேபியுடன் கூட்டணி வைத்துக்கொண்டால் நீங்கள் கேட்கும் சின்னம் கிடைக்கும் குக்கராக இருந்தாலும் சரி ஓடாத சைக்கிளாக இருந்தாலும் சரி போட்டுக் கொடுத்து விடுவார்கள். பிஜேபிக்கு எதிர் அணியில் இருந்தால் என்ன செய்தாலும் நாம் தமிழர் கட்சி உட்பட மதிமுக விடுதலைச் சிறுத்தைகள் உள்ளிட்ட கட்சிகளுக்கு சின்னம் ஒதுக்குவது கிடையாது. இந்தியாவில் எல்லோருக்கும் பொதுவான சட்டம் இல்லாமல் பிஜேபிக்கு ஆதரவாக இருந்தால் ஒரு சட்டம்.*

*பி.ஜே.பி.க்கு விரோதமாக இருந்தால் இரண்டு சட்டங்கள். இரண்டு சட்டங்கள் இந்தியாவில் அமல்படுத்தப்படுகிறது இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக தேர்தலில் பிஜேபி அணியை தோற்கடிக்க வேண்டும் மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வரை கைது செய்தார்கள் என்றால் போராட்டம் நடத்த தான் செய்வார்கள். இந்தியாவில் இதுபோன்ற நிகழ்வு நடந்தது கிடையாது. சர்வாதிகார ஆட்சியில் மட்டுமே இது போன்ற நிகழ்வு நடைபெறும். ஒரு மாநில முதல்வரை கைது செய்து நிலைகுலைய வைத்தால் நிச்சயமாக போராடுவார்கள். என்னை பொருத்தவரை இந்தியா முழுவதும் போராட்டம் வெடிக்க வேண்டும். புதுச்சேரி உட்பட 40 தொகுதிகளிலும் திமுக காங்கிரஸ் கூட்டணி அமோக வெற்றி பெறும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.*

*இந்நிகழ்வுகளில் காங்கிரஸ் தெற்கு மாவட்ட தலைவர் இராம. சுப்புராம், மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிரமணியன், சீனி. பழனியப்பன், அழகு.சிதம்பரம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட தலைவர் அஸ்ரப் அலி, த.மணி ராஜன், தேவி,மேகநாதன், கே.ஆர்.ராமசாமி, அருண் குமார், சுப.துரைராஜா, முல்லை ரமேஷ், தேவி, மற்றும் இந்திய கூட்டணி அனைத்து கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.*

### முத்திரைதாள்களின் வித்தியாசம் தெரியாத பா.ஜ.க. அண்ணாமலை

# எப்படி மக்களின் பிரதிநிதியாகச் செயல்பட முடியும்?

## மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. கேள்வி!



*சென்னை, மார்ச்.30-*

*இந்திய நீதித் துறைக்கு அல்லாத முத்திரைத் தாளுக்கும், நீதி மன்றங்க ளில் பயன்படுத்தப்படும் இந்தியா கோர்ட் கட்டண முத்திரைத்தா ளுக்கும் வித்தியாசம் தெரியாத அண்ணாமலை எப்படி மக்களின் பிரதிநிதியாக செயல்பட முடியும் என மூத்த வழக்கறிஞர் திமுக மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் கேள்வி எழுப்பி உள்ளார்.*

*இது குறித்து எக்ஸ் வலைத்தளத்தில் பதிவிட்டுள்ள வில்சன், தமிழ்நாட்டில் உள்ள ஒரு அரசியல்வாதி, மற்றவர்களை "UPSC தேர்வு எழுத முடியுமா என சவால் விடுவதாகவும் மேலும் அவர் ஒரு ஐ.பி. எஸ். அதிகாரி என்று அடிக்கடி பெருமை பேசு வதாகவும் குறிப்பிட்டுள் ளார்.*

*India Non Judicial முத்திரைத்தாளுக்கும், நீதி மன்றங்களில் பயன்படுத்தப்படும் India Court Fee முத்திரைத்தா ளுக்கும் வித்தியாசம் தெரியாத ஐபிஎஸ் அதிகாரியா அவர்? எனவும் இப்படிப்பட்ட நபர் கோவை மக்களின் பிரதிநிதியாக நாடாளுமன்றத்தில் எப்படி பணியாற்ற முடியும்? என்றும் அவர் கேள்வி எழுப்பி உள்ளார்.*

*முத்திரைத் தாள்களின் வித்தியாசத்தை தெரியாத ஒருவர் சட்டங்கள் மற்றும் கொள்கைகளை நிறைவேற்றுவதில் எவ்வாறு திறம்பட பங்காற்ற முடியும்? என்றும் வில்சன் பதிவிட்டுள்ளார்.*

# மக்களவைத் தேர்தல்: 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து சிபிஐ (எம்) மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் பிரச்சார பயணம்!



18வது மக்களவை தேர்தலையொட்டி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)யின் தமிழ்நாடு மாநில செயலாளர் கே. பாலகிருஷ்ணன் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரம் மேற்கொள்கிறார். அவருடைய பிரச்சார பயணத் திட்ட விபரம் கீழே தரப்பட்டுள்ளது. அடுத்த பயண திட்டம் பின்னர் வெளியிடப்படும்.

| | |
|---|---|
| **30.3.2024** | **கன்னியாகுமரி** |
| **31.03.2024** | **திண்டுக்கல்** |
| **01.04.2024** | **தேனி** |
| **02.04.2024** | **விருதுநகர்** |



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (28.03.2024) முகாம் அலுவலகத்தில், திரைப்பட இயக்குநர் சங்கர், அவரது மனைவி திருமதி ஈஸ்வரி சங்கர் ஆகியோர் சந்தித்து, தங்களது மூத்த மகள் திருமண அழைப்பிதழை வழங்கினர். திருமதி. துர்கா ஸ்டாலின் உடனிருந்தார்.



இந்தியா கூட்டணி சார்பில் மத்திய சென்னை தொகுதியில் போட்டியிட்டு தி.மு.க. வேட்பாளர் தயாநிதி மாறன், வடசென்னை மக்களவைத் தொகுதி வேட்பாளர் கலாநிதி வீராசாமி ஆகியோர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். அமைச்சர் பி.கே.சேகர்பாபு உடன் உள்ளார்.

## விவசாயக்கடன் - கல்விக் கடன்களை தள்ளுபடி செய்ய முடியாதென்று கூறும்

# பா.ஜ.க., கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு மட்டும் கடன் தள்ளுபடி செய்வது ஏன்?

## கரூர் பிரச்சாரத்தில் கனிமொழி கருணாநிதி கேள்வி!

**கரூர், மார்ச் 30–**

**தமிழ்நாட்டில் ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, ‘இந்தியா’ கூட்டணியின் கரூர் நாடாளுமன்றத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் ஜோதிமணியை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரித்தார். கரூர் நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள கிருஷ்ணராயபுரம் கடைவீதி, வெங்கமேடு அண்ணா சிலை அருகில், க.பரமத்தி கடைவீதி ஆகிய பகுதிகளில் கூடி நின்ற மக்களைச் சந்தித்து,கை சின்னத்திற்கு வாக்கு அளிக்கப் பிரச்சாரம் செய்தார்.**

பிரச்சாரத்தில் கனிமொழி கருணாநிதி பேசியதாவது:

நாடாளுமன்றத்தில் தொடர்ந்து குரல் கொடுக்கக் கூடியவர் ஜோதிமணி அவர்கள், மக்கள் பிரச்சனை என்றால் நாடாளுமன்ற குரல் எழுப்புவர், பின் அதற்காக இடை நீக்கம் செய்யப்படுவார், அதிகம் இடை நீக்கம் செய்யப்பட்டவர்களில் அவரும் ஒருவர். இந்த தேர்தல் என்பது வெறும் அரசியல் வெற்றிக்கான தேர்தல் இல்லை இந்த நாட்டை மீட்டெடுக்கக் கூடிய தேர்தல் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். ஒன்றிய மோடி ஆட்சி இன்றைக்கு இந்த நாட்டை சிதைத்துக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து, மத ரீதியாக, சாதி ரீதியாக மக்களிடம் பிரிவினை ஏற்படுத்தி அரசியல் செய்கிறார்கள். அந்த சண்டையில் வரக்கூடிய ஆபத்தான அரசியலை வைத்து ஓட்டு வாங்கி ஜெயித்துவிடலாம் என்று நினைக்கிறார்கள்.

### மணிப்பூரில் அவலம்!

மணிப்பூரில் இன்னும் பிரச்சனை சீராகவில்லை, மக்கள் இன்னும் நிவாரண முகாம்களில் தான் உள்ளனர், முகாம்களில் குழந்தைகளை வைத்து கொண்டு கஷ்டப்படுகிறார்கள். பெரியவர்களுக்கு மருந்து மாத்திரை கிடைக்கவில்லை, சாப்பாடு கிடையாது என்ற பயத்தோடு அங்கே மக்கள் அவதிப்பட்டுக் கொண்டு இருந்தனர். இரு பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டனர், அங்கே அவமானப்படுத்தப்பட்டு பாலியல் கொடூரங்களுக்கு ஆளாக்கப்பட்ட ஆயிரம் பேருக்கு மேல் அந்த பெண்கள் அவதிப்படும், ஒரு நிலையை நாம் பார்த்தோம். இதுவரை அங்குச் சென்று மக்களை பிரதமர் சந்திக்கவில்லை. ஆனால் எதிர்க்கட்சிகள் நங்கள் அங்கே இருக்கக்கூடிய மக்களை சந்தித்து இருக்கிறோம்.

புயல் வெள்ளத்தினால் சென்னை, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்கள் பாதிக்கப்பட்ட போது வந்து பார்க்காத பிரதமர் மோடி, மக்களுக்கு ஒரு கஷ்டம் என்றால் வந்து எட்டிப் பார்க்காத பிரதமர். தேர்தல் என்று வந்தால் 10 நாட்கள் இங்கு தான் இருந்தார்.

காங்கிரஸ், தி.மு.க. கூட்டணி ஒன்றியத்தில் இருந்த போது, 100 நாட்கள் வேலைத் திட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் இவர்கள் 100 நாள் திட்டம் மக்களுக்கு 30 நாட்கள்கூட வேலைகிடைக்கவில்லை. பணத்தில் மிதந்து கொண்டு இருக்கும் கார்ப்பெட் நிறுவனத்திற்கு 68,607 கோடி கடன் தள்ளுபடி செய்துள்ளனர், ஆனால் 100 நாட்கள் வேலை திட்டத்தில் மூலம் மக்களுக்கு வேலை வழங்க நிதி இல்லையாம்.

### விவசாயிகள் மீது தாக்குதல்!

அடிப்படை ஆதார விலை வேண்டி விவசாயிகள் போராட்டம் நடத்திய போது, அவர்களை ட்ரோன், ஆயுதம் கொண்டு தாக்கினர். பாலியல் குற்றங்களுக்கு



உள்ளான 44 பேர் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர், பிரிஜ் பூசன் என்ற நாடாளுமன்ற உறுப்பினர் மீது மல்யுத்த வீராங்கனை பாலியில் வன்கொடுமை புகார் அளித்து, போராட்டம் நடத்தினர். அந்த வீரர் வீராங்கனைகளை காவல்துறை என்ன செய்தது என்று நம் அனைவருக்கும் தெரியும்.

ஒருவருக்கு ஜாமீன் என்பது அடிப்படையான ஒன்று, முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி இத்தனை மாதம் ஆகியும் ஜாமின் வழங்க வில்லை. இந்தியாவில் 2 முதலமைச்சர்கள் அலமக்கத்துறையினரால் ஒன்றிய அரசு கைது செய்துள்ளது. 90 சதவீத அமலாக்கத்துறை எதிர்க்கட்சியினர் மீது தான் வழக்குப் போட்டுள்ளனர்.

100 பள்ளிகள் ஸ்மார்ட் வகுப்புகள், 355 கோடியில் நெடுஞ்சாலைகளில் மேம்பாலங்கள், 587 கோடியில் மாவட்ட வளர்ச்சிக்கு புதிய திட்டம், மற்றும் ஜவுளி உற்பத்தி பொருட்கள் மேம்பாட்டு ஆலை உள்ளிட்ட பல திட்டங்களை ஜோதிமணி அவர்கள் கொண்டு வந்துள்ளார்

ஒன்றியத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால், சமையல் கேஸ் 500 ரூபாய் வழங்கப்படும், பெட்ரோல் 75, டீசல் 65 ரூபாய் விற்பனை செய்யப்படும். 100 நாட்கள் வேலைத் திட்டம் , 150 நாட்களாக மாற்றப்படும், வேலை நாள் சம்பளம் 400 ரூபாய் வழங்கப்படும் என்று நாம் முதலமைச்சர் தெரிவித்துள்ளார், மேலும் காங்கிரஸ் கட்சியும் தெரிவித்துள்ளது.

### கரூரில் தொழில் பாதிப்பு!

கரூர் மாவட்டத்தில் ஜிஎஸ்டி வரியால், பல்வேறு தொழில் நிறுவனங்கள் பாதிக்கப்பட்டன, இங்கு அதிகமாக நூற்பாலைகள், ஜவுளி ஆலைகள், போன்றவை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன, காலதாமதமான வரி செலுத்துதல், அதிக வரி விதிப்பு போன்றவற்றால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தில் தொடர்ந்து குரல் கொடுக்க கூடியவர் ஜோதிமணி. மக்கள் பிரச்சினை என்றால் நாடாளுமன்ற குரல் எழுப்புவர், பின் அதற்காக இடை நீக்கம் செய்யப்படுவார், அதிகம் இடை நீக்கம் செய்யப்பட்டவர்களில் அவரும் ஒருவர்.

### செந்தில்பாலாஜி மீது பா.ஜ.க.வுக்கு பயம்!

கரூர் மாவட்ட செயலாளர் செந்தில் பாலாஜி அவர்கள் மீது பா.ஜ.க. வினருக்கு பயம், அவர் உடல் நிலை சரியில்லை என்ற போதும் அவருக்கு ஜாமீன் வழங்க வில்லை. கரூர் அண்ணாமலை பயத்தால் தொகுதி மாற்றி விட்டார்.

அண்ணாமலை இதுவரை 20,000 மேற்பட்ட புத்தகங்கள் படித்து உள்ளாராம், கடந்த முறை அவருக்கு தெரிந்த கோவில்பட்டியை சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரலட்சுமி பற்றி கூறினார், கோவில்பட்டி எனது தொகுதி, அவர் சொன்ன கோவில்பட்டி வீரலட்சுமி 1961ஆம் ஆண்டு தான் பிறந்திருந்தார், அப்படி இருக்கும் பொழுது எப்படி அவர் சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற்றிருக்க முடியும். யாரைப் பற்றி விமர்சனம் செய்யும் தகுதி அண்ணாமலைக்கு கிடையாது.

தலைவர் கொடுத்த தொலைக்காட்சி இன்னும் ஓடுகிறது, ஆனால் அவர்கள் கொடுத்த மிக்ஸி, கிரைண்டர் ஓடியே விட்டது. பசி பட்டினி உள்ள நாடுகளில் இந்தியா (Global hunger index) அதில் பார்த்தால் 111வது இடம். தமக்கு மேலே நேபால், பங்களாதேஷ், பாகிஸ்தான் இருக்கிறது. நமக்கு குறைவாக பசி பட்டினியாக உள்ளவர்கள் நாடாக பாகிஸ்தான் உள்ளது.

நம் தலைவர் கலைஞர் அவர்கள் யாரும் பசி பட்டினியுடன் இருக்கக் கூடாது என்று ஒரு ரூபாய்க்கு அரிசி திட்டத்தை கொண்டு வந்தார், பள்ளி செல்லும் குழந்தைகள் காலையில் பசியுடன் இருக்கக் கூடாது என்று காலை உணவு திட்டத்தை கொண்டு வந்தார் நம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

கரூர் மாவட்டத்தில் ஜிஎஸ்டி வரியால், பல்வேறு தொழில் நிறுவனங்கள் பாதிக்கப்பட்டன, இங்கு அதிகமாக நூற்பாலைகள், ஜவுளி ஆலைகள், போன்றவை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன, காலதாமதமான வரி செலுத்துதல், அதிக வரி விதிப்பு போன்றவற்றால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

### சின்ன ஸ்டிக்கர் பெரிய ஸ்டிக்கர்!

குடியுரிமை சட்ட பா.ஜ.க. கொண்டு வந்த போது அதற்கு ஆதரவாக வாக்கு அளித்து அ.தி.மு.க., அவர்களுக்கு ரத்தின கம்பளம் விரித்து வரவேற்றது அ.தி.மு.க.. அ.தி.மு.க. சின்ன ஸ்டிக்கர், பா.ஜ.க. பெரிய ஸ்டிக்கர், அதிமுக எந்த பொருளாக இருந்தாலும் ஸ்டிக்கர் ஒட்டி தான் வரும். இந்திரா காந்தி அவர்கள் ஆட்சி காலத்தில், காங்கிரஸ் ஆட்சி காலத்தில் கொண்டு வரப்பட்ட திட்டங்களை எல்லாம் பெயர் மாற்றி, அந்த திட்டங்களை அவர்களே கொண்டு வந்து போல காட்டி கொள்கின்றனர்.

1985 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட இந்திராகாந்தி வீடு வழங்கும் திட்டம், பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா இதை படிப்பதற்குள் தலை சுற்றுகிறது, அப்படி இருக்கும் பொழுது இதை எப்படி புரிந்து கொள்வது. இந்தத் திட்டத்திற்கு ஒன்றிய அரசு ரூ.72000 மட்டுமே வழங்குகிறது. ஆனால் தமிழ்நாடு அரசு 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் வழங்குகிறது. ஆனால் இதற்கு பெயர் பிரதமரின் வீடு கட்டும் திட்டம், முதலமைச்சரின் வீடு கட்டும் திட்டம் என்ற பெயரில் இது இருந்திருக்க வேண்டும்.

பெண் பிள்ளைகளை பாதுகாக்கும் திட்டம் 2008 இல் கொண்டு வரப்பட்டது, இப்பொழுது அந்த திட்டத்திற்கு பெயர் மாற்றியுள்ளனர் பேட்டி பச்சா, பேட்டி படாவோ யோஜனா என்று மகாராஷ்டிராவில் 15 ஆயிரம் கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகள் உள்ளன, ஆனால் அங்கு 44 சுங்கச்சாவடிகள் மட்டுமே உள்ளது, தமிழ்நாட்டில் 5,000 கி.மீ தொலைவிற்கு தேசிய நெடுஞ்சாலை உள்ளன, ஆனால் இங்கு 52 சுங்கச்சாவடிகள் உள்ளன. இன்னும் 20 சுங்கச் சாவடிகள் கொண்டு வர உள்ளனர்.

நாம் ஆட்சிக்கு வந்தவுடன் சுங்கச்சாவடிகளை இழுத்து மூடி விட்டு வீட்டுக்கு செல்லுங்கள் என்று சொல்ல உள்ளோம். விவசாய கடன் தள்ளுபடி செய்ய முடியாது என்றும் மாணவர்களுக்கான கல்வி கடன் தள்ளுபடி செய்ய முடியாது என்று கூறும் பாஜக. கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு மட்டும் கடன் தள்ளுபடி செய்துள்ளனர். நாம் ஒரு ரூபாய் வரி பணம் கொடுத்தோம் என்றால், 26 பைசா தான் திருப்பி தருகிறார்கள்

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தருவோம் என்று கூறிய மோடி, தற்போது பக்கோடா போடுங்கள் என கூறுகிறார். இந்த தேர்தலில் நாடும் நமதே நாற்பதும் நமதே, இந்த தொகுதியில் தி.மு.க. விற்கும் கைதான், காங்கிரசும் கைதான், இதற்கு வாக்களித்து இந்தியா கூட்டணியை வெற்றி பெற செய்யுங்கள்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி பேசினார்.



திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதியில் இந்தியா கூட்டணியின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வேட்பாளர் ஆர்.சச்சிதானந்தத்திற்கு வாக்கு சேகரிப்பு பிரச்சாரம் திண்டுக்கல் ஒன்றியம் பள்ளபட்டி ஊராட்சியின் முருக பவனம் பகுதியில் துவங்கியது. கழக துணைப் பொதுச் செயலாளரும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி வாக்குகள் சேகரித்தபோது எடுத்த படம்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஆரணி நாடாளுமன்றத் தொகுதியில் ‘இந்தியா’ கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் தரணி வேந்தனை ஆதரித்து மயிலம் தொகுதி ஒலக்கூர் மேற்கு ஒன்றியம் ஆதிப் பக்கம் ஊராட்சியில் பொதுமக்களிடத்திலும்,வெள்ளி மேடு பேட்டை பஜாரி பொதுமக்களுக்கு டீ போட்டுக்கொடுத்தும் நூதன முறையில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர், ஒன்றிய பெருந்தலைவர் சொக்கலிங்கம், துணை சேர்மன் ராஜாராமன் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.



ஆரணி நாடாளுமன்றத் தொகுதி 'இந்தியா' கூட்டணி வேட்பாளர் எம்.எஸ்.தரணிவேந்தனை ஆதரித்து செஞ்சி சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை ஆற்றினார். உடன் சிறுபான்மை நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் இருந்தனர்.



மதுரை வடக்கு மாவட்டம் கிழக்கு ஒன்றியம் கிழக்குத் தொகுதிக்கு உட்பட்ட ஒத்தக்கடையில் 'இந்தியா' கூட்டணி மதுரை நாடாளுமன்ற தொகுதி அலுவலகத்தை வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி மூர்த்தி திறந்து வைத்து உரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் அ.பா.ரகுபதி, பெருநாழி போஸ், வடிவேல் முருகன், பாலாண்டி, வக்கீல் கலாநிதி, சரவணன், அண்ணாமலை, வக்கீல் மூர்த்தி, மகுடபதி, நிஷாந்த் வினோத் பொன்னுத்தாயி மூவேந்திரன் மற்றும் திரளான கூட்டணி கட்சியினர், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கரூரில் 'இந்தியா' கூட்டணி தேர்தல் பணிமனை திறப்பு!

## அமைச்சர்கள் அர.சக்கரபாணி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்புரை!

கரூர், மார்ச் 30 -

கரூரில் 'இந்தியா' கூட்டணி தேர்தல் பணிமனை திறப்பு விழா நடைபெற்றது. அமைச்சர்கள் அர.சக்கரபாணி, அன்பில்மகேஷ் பொய்யாமொழி முன்னிலை வகித்தனர். செந்தில் பாலாஜி உள்ளே இருக்கும்போதே கரூரில் போட்டியிடாமல் கோவைக்கு அண்ணாமலை ஓடியது ஏன்? அந்த பயம் இருக்க வேண்டும் என அன்பில்மகேஸ்பொய்யாமொழி பேசினார்.

கரூரில் இந்தியா கூட்டணியின் காங்கிரஸ் வேட்பாளர் ஜோதிமணியை ஆதரித்து, தேர்தல் பணிமனை கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி ஆலோசனைப்படி, கரூர் கோவை சாலையில் அமைக்கப்பட்டு திறப்பு விழா நடைபெற்றது. உணவுத் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தேர்தல் பணிமனையை திறந்துவைத்தார். பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கரூர் மாவட்ட தேர்தல் பொறுப்பாளர், எம்.பி., எம்.எம்.அப்துல்லா, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபப்பாண்டியன், நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.இளங்கோ, க.சிவகா மசுந்தரி, வேடசந்தூர் காந்திராஜன், கழக தொகுதி பொறுப்பாளர்கள் பணப்பட்டி தினகரன், ப.ராணி, மீனா ஜெயக்குமார், மாநகர செயலாளர் எஸ்.பி.கனகராஜ், மாநில நிர்வாகிகள் கரூர் முரளி, முனவர் ஜான், வழக்கறிஞர் விஜயகுமார், மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், மாவட்ட நிர்வாகிகள் பகுதி கழகச் செயலாளர்கள் முன்னிலை வகித்தனர்.

**அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு!**

உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது:-

கடந்த தேர்தலில் 39 தொகுதிகளில் திமுக கூட்டணி வெற்றி பெற்றது. இந்த முறை 40 தொகுதிகளில் இந்தியா கூட்டணி வெற்றி பெறுவது உறுதி.

தமிழக முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மத்தியில் யாரை பார்த்து கை நீட்டுகிறாரோ அவர் தான் இந்திய நாட்டின் பிரதமர். தமிழகத்தில் கடந்த 34 மாதங்களில் ஏராளமான சாதனை திட்டங்களை தமிழக முதல்வர் தளபதி அவர்கள் செய்துள்ளார். இந்த சாதனைகளை எடுத்து கூறி மக்கள் மத்தியில் வாக்கு சேகரிப்போம்.

கரூரில் காங்கிரஸ் வேட்பாளர் ஜோதிமணி மீண்டும் போட்டியிடுகிறார். கடந்த முறை 4.20 லட்சம் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இம்முறை அதை விட அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவார். தமிழக முதல்வர் அவர்கள் ஏராளமான தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளார்கள்.

ஒன்றிய அரசு கடந்த 10 ஆண்டுகளாக தமிழகத்தை வஞ்சித்து உள்ளது. தமிழகத்தில் இருந்து வரியாக 1 ரூபாய் பெறும் ஒன்றிய அரசு தமிழகத்திற்கு வெறும் 28 பைசா மட்டுமே கொடுக்கிறது. ஆனால் உத்தரப்பிரதேசம், மத்திய பிரதேசம் குஜராத் போன்ற மாநிலங்களுக்கு அள்ளி கொடுக்கும் ஒன்றிய அரசு தமிழகத்திற்கு கிள்ளிக்கூட கொடுப்பதில்லை. தமிழக முதல்வர் தளபதி அவர்கள், மாநில இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் தேர்தல் பிரச்சாரம் செல்லும் இடங்கள் எல்லாம் மக்கள் மத்தியில் நல்ல எழுச்சி உள்ளது. 40 தொகுதிகளையும் இந்தியா கூட்டணி வெற்றி பெறுவது உறுதி.

பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கடந்த தேர்தலில் 521 தேர்தல் வாக்குறுதி அளித்ததாகவும் நிறைவேற்றி யவற்றை முதல்வர் வெள்ளை அறிக்கை வெளியிடப்படுமா என கேள்வி எழுப்பியதாக கூறினார்களா. கொரோனா காலத்தில் அனைத்து மக்களுக்கும் ரூ. 4000 ரூபாய் வழங்கியவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தர முடியாது என அடம் பிடித்தவர் எடப்பாடி பழனிச்சாமி.

பெண்களுக்கான விடியல் பயணம் திட்டத்தில் 445 கோடி பேர் பயணம் செய்துள்ளனர். கொடுக்கவே முடியாது என கேலி பேசிய நிலையில் கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தில் 1 கோடியே 15 லட்சம் பேர்கள் பயனடைந்துள்ளனர். தமிழத்தில் 31 ஆயிரம் அரசு தொடக்கப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகள் 17 லட்சம் பேர்கள் பயனடைந்துள்ளனர்.

இன்னுயிர் காப்போம் திட்டத்தின் மூலம் 2 லட்சம் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளது. தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகளை விட சொல்லாத திட்டங்களையும் நிறைவேற்றி மக்கள் பயன் அடைந்துள்ளனர் எதையும் தெரிந்து கொண்டு பேச வேண்டும் வாயில் வந்ததை உளறுவது அவருக்கு வேலை.

இவ்வாறு அவர் பேசினார்.

**அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேச்சு!**

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேசியது,

கரூர் மாவட்ட கழகச் செயலாளரும் அமைச்சராக இருந்தவருமான செந்தில் பாலாஜி மீது பழிவாங்கும் நோக்கில் பொய் வழக்கு போட்டு கைது செய்துள்ளனர் ஜாமீன் மறுக்கப்பட்டுள்ளது கடந்த தேர்தலில் அண்ணாமலை அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு செந்தில் பாலாஜியால் விரட்டி அடிக்கப்பட்டவர். தற்போது செந்தில் பாலாஜி வெளியே இல்லாத நிலையில் தைரியம் இருந்தால் அவர் கரூர் எம்பி தேர்தலில் போட்டியிட்டு இருக்க வேண்டும் . ஆனால் செந்தில் பாலாஜி சிறையில் இருக்கும் நிலையில் கூட அவரை பார்த்து பயந்து போய் கோவைக்கு ஓடி விட்டார். இதுதான் திமுக. செந்தில் பாலாஜி வெளியே இல்லாவிட்டாலும் ஒவ்வொரு தொண்டனும் ஈசல் போல் பறந்து பறந்து தேர்தல் பணியாற்றி காங்கிரஸ் வேட்பாளரை வெற்றி பெறச் செய்வார்கள். தற்போது நடை பெற உள்ள தேர்தலில் மக்கள் ஆதரவு நமது கூட்டணிக்கு அமோகமாக இருக்கிறது. தி.மு.க. விற்கும் யாருக்கும் போட்டி கிடையாது. திமுகவில் இருப்ப இருக்கும் மாவட்ட செயலாளர்கள்அமைச்சர்களில் யார் நமது அணிக்காக நமது வேட்பாளர்களுக்காக அதிக ஓட்டுகளை யார் பெறுவது அதிக ஓட்டுகளை எந்த அமைச்சர்கள் பெறுவது என்பதில் தான் போட்டியே இருக்கிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

கரூரில் இந்தியா கூட்டணியின் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ஜோதிமணி வேட்பு மனு தாக்கல் செய்தார்.

அமைச்சர்கள் அர. சக்கரபாணி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபண்டியன், கரூர் மாவட்ட தி.மு.க. தேர்தல் பொறுப்பாளர் எம்பி.எம்.எம். அப்துல்லா ஆகியோர் கலந்து கொண்டனர்.

வேட்பு மனுத் தாக்கல் செய்த பிறகு கரூர் நாடாளுமன்ற தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் ஜோதிமணி செய்தியாளர்களிடம் பேசுகையில்,

தமிழகம் முழுவதும் அ.தி.மு.க. பி.ஜே.பி.யின் பி டீமாக செயல்பட்டு வருகிறது.கடந்த 2019 மக்களவைத் தேர்தலில் கரூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற நான், தொகுதி மக்களுக்காக ரூ.500 கோடி நிதியில் திட்ட பணிகள் செய்துள்ளேன். மக்களவையில் கடந்த 70 ஆண்டுகளாக ஒலிக்காத குரலாக தமிழக மக்கள் பிரச்சனை குறித்து குரல் எழுப்பி உள்ளேன்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டிற்கு பல்வேறு திட்டங்கள் கொண்டு வந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். குறிப்பாக கல்விக்கும், மருத்துவத்திற்கும், பெண்கள் முன்னேற்றத்திற்கும் மகத்தான திட்டங்களை செயல்படுத்தியுள்ளார். இதனால் தேர்தல் பிரச்சாரத்தின் போது அவருக்கு மக்கள் மத்தியில் நல்ல எழுச்சி மற்றும் வரவேற்பு ஏற்பட்டுள்ளது.கடந்த 10 ஆண்டுகளாக ஆட்சி நடத்தி வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழக மக்களுக்கு எதுவும் செய்யவில்லை. தமிழகத்தில் பி.ஜே.பி.யின் அடிமையாக பி டீமாக இருந்து வந்த அ.தி.மு.க. கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் தமிழக மக்களுக்கு எதுவும் செய்யவில்லை.

அ.தி.மு.க. இனி எப்போதும் அடிமையாகத்தான் இருக்க வேண்டும் என்கிற நிலைமையில் உள்ளனர்.

கரூர் மாவட்டத்தில் செந்தில்பாலாஜி அமைச்சராக இருந்தபோது கிருஷ்ணராயபுரம், அரவக்குறிச்சி, மணப்பறை ஆகிய 3 தொகுதிகளில் அரசு கலைக்கல்லூரிகள் அமைக்கப்பட்டுள்ளது. கரூரில், வேளாண்மை கல்லூரி கொண்டு வரப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், விசைத்தறி தொழிலாளர்களுக்கு மின் கட்டணம் சலுகை என திட்டங்களை செயல்படுத்தியுள்ளார். அமைச்சர்கள் கே.என்.நேரு, அர.சக்கரபாணி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, ஐ.பெரியசாமி என ஐந்து அமைச்சர்கள் கரூர் மக்களவைத் தொகுதிக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்துள்ளனர். இதை மக்களிடம் சொல்லி ஓட்டு கேட்போம். ஆனால், அதிமுக தம்பிதுரை 10 ஆண்டு தொடர்ந்து எம்பியாக இருந்தும் கரூர் தொகுதி எம்பிக்கு எந்த அலுவலகம் கிடையாது. அவரை நேரில் சந்திக்க முடியாது. தொகுதி மக்களுக்கு அவர்கள் எதுவும் செய்யவும் இல்லை. ஸ்மார்ட் சிட்டி திட்டத்தைக் கூட கரூருக்கு கொண்டுவர முடியாத நிலையில் தான் இருந்தனர் நாடாளுமன்றத்திலும் தொகுதி பிரச்சினையை குறித்து வாயை திறப்பதில்லை. இப்போது அதை பேசவோம் இதை பேசுவோம் என்கிறார்கள்.

தைரியம் இருந்தால் பெட்ரோல் டீசலை கேஸ் விலை உயர்வு குறித்து பேசுவார்களா?

கடந்த 10 ஆண்டுகளில் தமிழக மக்களையும் கரூர் தொகுதி மக்களையும் சீரழிவு பாதைக்கு கொண்டு சென்று விட்டனர். மக்களவை தேர்தலில் இந்தியா கூட்டணி மகத்தான வெற்றி பெறும் என்றார்.

---

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து மதிமாறன் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்- 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி. மதிமாறன். இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :-

| தேதி | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|
| 02.04.2024 - | மதுரை |
| 03.04.2024 - | தேனி |
| 04.04.2024 - | திண்டுக்கல் |
| 05.04.2024 - | கரூர் |
| 06.04.2024 - | பொள்ளாச்சி |
| 07-04-2024 - | கோயம்புத்தூர் |
| 08-04-2024 - | நீலகிரி |
| 09-04-2024 - | திருப்பூர் |
| 10-04-2024 - | சேலம் |
| 11-04-2024 - | நாமக்கல் |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 29.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

---

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நாஞ்சில் சம்பத் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல் - 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி. நாஞ்சில் சம்பத் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :-

| தேதி | | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 03.04.2024 | - | திருநெல்வேலி |
| 04.04.2024 | - | விருதுநகர் |
| 05.04.2024 | - | தென்காசி |
| 06.04.2024 | - | தூத்துக்குடி |
| 07.04.2024 | - | இராமநாதபுரம் |
| 08-04-2024 | - | மதுரை |
| 09-04-2024 | - | சேலம் |
| 10-04-2024 | - | கள்ளக்குறிச்சி |
| 11-04-2024 | - | கடலூர் |
| 12-04-2024 | - | பொள்ளாச்சி |
| 13-04-2024 | - | திருப்பூர் |
| 14-04-2024 | - | கோயம்புத்தூர் |
| 15-04-2024 | - | நீலகிரி |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 29.03.2024


**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

---

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து போஸ் வெங்கட் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல் - 19 அன்று நடைபெற உள்ளநாடாளுமன்றத் தேர்தலையொட்டி. போஸ் வெங்கட் அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு: -

| தேதி | | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 01.04.2024 | - | சேலம் |
| 02.04.2024 | - | நாமக்கல் |
| 03.04.2024 | - | பெரம்பலூர் |
| 04.04.2024 | - | திருச்சி |
| 05.04.2024 | - | கோயம்புத்தூர் |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 29.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

---

## ஒழுங்கு நடவடிக்கை

### தலைமைக் கழக அறிவிப்பு

திருநெல்வேலி மத்திய மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவர் ஒய்.இன்பராஜ், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 29-03-2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

டி.எம்.கதிர் ஆனந்தை ஆதரித்து

# ஆலங்காயத்தில் வாக்குச் சேகரிப்பு!

## மாவட்டச் செயலாளர் க.தேவராஜி - முன்னணியினர் பங்கேற்பு!

திருப்பத்தூர், மார்ச் 30-

'இந்தியா' கூட்டணி சார்பில் வேலூர் நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் டி.எம். கதிர் ஆனந்த்தை ஆதரித்து

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி, ஆலங்காயம் கிழக்கு ஒன்றியம், காவலூர், நரசிங்கபுரம், பூங்குளம், புதூர் மிட்டூர் ஆகிய ஊராட்சிகளில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தார்.

ஆலங்காயம் கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ். தாமோதிரன் தலைமை தாங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் டி.செங்குட்டுவன், வாணியம்பாடி நகர செயலாளர் வி.எஸ்.சாரதிகுமார், ஆலங்காயம் மேற்கு ஒன்றிய செயலாளர் வி.எஸ்.ஞானவேலன், மாநில தொண்டரணி து.செயலாளர் பி.எம்.முனிவேல், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தே.பிரபாகரன், ஆலங்காயம் ஒன்றியக்குழுத் தலைவர் சங்கிதாபாரி,

மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் எஸ்.ராஜா மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.



தேனி வடக்கு மாவட்டம் தேனி தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தெற்கு ஒன்றிய செயலாளர் ரத்னசபாபதி தலைமையில் நடைபெற்றது. ஆலோசனைக் கூட்டத்தில்தேனி நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் தங்க தமிழ்ச்செல்வனுக்கு வீடு வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிக்க வேண்டும் என்று ஆலோசனை வழங்கப்பட்டது பேரூர் செயலாளர் செல்வராஜ் பேரூராட்சி தலைவர் கீதா சசிமற்றும் கழக முன்னோடிகள் உடன் இருந்தனர்.



## 2024 நாடாளுமன்றத் தேர்தல் 'இந்தியா கூட்டணி' வேட்பாளர்களை ஆதரித்து

கலைஞர் 100 1924 - 2023

# கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்

2024 ஏப்ரல் 19–அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 'இந்தியா கூட்டணி' வேட்பாளர்களை ஆதரித்து, தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குகளை சேகரித்து வருகிறார். அவரின் 2–வது கட்ட தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயண விவரம் வருமாறு:–

**30.03.2024, சனிக்கிழமை**

| வ.எண் | நேரம் | இடம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | அண்ணா பேருந்து நிலையம் அருகில், மதுராந்தகம், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் | காஞ்சிபுரம் |
| 2 | மதியம் 12.00 மணி | நான்கு முனை சிக்னல் சந்திப்பு, விழுப்புரம், விழுப்புரம் தெற்கு மாவட்டம். | விழுப்புரம் |
| | | மதிய உணவு இடைவேளை | |
| 3 | மாலை 4.30 மணி | மணிக்கூண்டு சாலை, உளுந்தூர்ப்பேட்டை, கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம். | விழுப்புரம் |
| 4 | மாலை 5.30 மணி | கடைவீதி, விருத்தாசலம், கடலூர் மேற்கு மாவட்டம். | கடலூர் |
| 5 | இரவு 7.00 மணி | நான்கு சாலை சந்திப்பு, ஜெயங்கொண்டம், அரியலூர் மாவட்டம் | சிதம்பரம் |
| 6 | இரவு 8.00 மணி | கடைவீதி நான்கு முனை சந்திப்பு, காட்டுமன்னார்கோவில், கடலூர் கிழக்கு மாவட்டம் | சிதம்பரம் |

**31.03.2024, ஞாயிற்றுக்கிழமை**

| வ.எண் | நேரம் | இடம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | தெற்கு ரத வீதி, சிதம்பரம், கடலூர் கிழக்கு மாவட்டம் | சிதம்பரம் |
| 2 | காலை 11.30 மணி | சீமாட்டி சிக்னல், நான்கு முனை சந்திப்பு, கடலூர், கடலூர் கிழக்கு மாவட்டம் | கடலூர் |
| | | மதிய உணவு இடைவேளை | |
| 3 | மாலை 4.30 மணி | வில்லியனூர் கிழக்கு மாட வீதி சந்திப்பு, புதுச்சேரி, புதுச்சேரி மாநிலம். | புதுச்சேரி |
| 4 | மாலை 5.30 மணி | மரப்பாலம் சந்திப்பு, புதுச்சேரி, புதுச்சேரி மாநிலம். | புதுச்சேரி |
| 5 | இரவு 6.30 மணி | அண்ணா சதுக்கம், புதுச்சேரி, புதுச்சேரி மாநிலம். | புதுச்சேரி |



அன்பகம்
சென்னை – 18.
நாள் : 27–03–2024.

கடலூர் காங். வேட்பாளர் டாக்டர் எம்.கே.விஷ்ணுபிரசாத்தை ஆதரித்து

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விருத்தாசலத்தில் வாக்குச் சேகரிக்கிறார் !

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ. கணேசன் அறிக்கை!

கடலூர், மார்ச் 30 -

கழக இளைஞரணி செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விருத்தாசலத்தில் பிரச்சா ரம் செய்வது தொடர்பாக மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் சி.வெ. கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



நடைபெற இருக்கின்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் கடலூர் நாடாளுமன்ற தொகுதியில் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் டாக்டர் எம்.கே. விஷ்ணு பிரசாத்தை ஆதரித்து கழக இளைஞரணி செயலாளர்-விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடலூர் மேற்கு மாவட்டம் விருத்தாசலம் கடை வீதியில் இன்று (30.3.2024) சனிக்கிழமை மாலை 5 மணி அளவில் கைச்சின்னத்திற்கு வாக்கு கேட்டு பிரச்சாரம் செய்கிறார்.

அது சமயம் 'இந்தியா' கூட்டணி கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள் மாவட்ட தலைவர்கள் மற்றும் கழக ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் தொ.மு.ச நிர்வாகிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன் என மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர் சி.வெ. கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



தேனி நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் தங்க தமிழ்ச்செல்வனுக்கு தேனி நகரப் பகுதியில் நகரச் செயலாளர் நாராயண பாண்டியன் ஏற்பாட்டில் கழகத்தினர் வீடு வீடாகச் சென்று வாக்குச் சேகரித்தனர். உடன் சுரேஷ், பவுன்ராஜ் மற்றும் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வாணியம்பாடி வீ. சிவாஜிகணேசன்

**மார்ச் 30 (2015)**



வேலூர் மாவட்டம், வாணியம்பாடி நகரக் கழகச் செயலாளராக 25 ஆண்டுகள் தொடர்ந்து கழகப் பணியாற்றியவர்.

வாணியம்பாடி நகர்மன்ற உறுப்பினராக 10 ஆண்டுகளும்; வாணியம்பாடி நகர்மன்ற தலைவராக ஒரு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்நகர மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

வேலூர் மத்திய கூட்டுறவு வங்கி துணைத் தலைவராகவும், வாணியம்பாடி நகர கூட்டுறவு வங்கித் தலைவராகவும், தென்னக ரயில்வே துறை ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமக்கல் கிழக்கு, மேற்கு, தெற்கு நகர தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம் நாமக்கல்லில் நடைபெற்றது. கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் வனத்துறை அமைச்சர் மா. மதிவேந்தன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், நகரச் செயலாளர்கள் ராணா ஆனந்த் , பூபதி, சிவக்குமார் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர் மாவட்ட 28 வது வார்டு பள்ளிவாசல் தெருவில் 'இந்தியா' கூட்டணி மதுரை நாடாளுமன்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் சு.வெங்கடேசனை ஆதரித்து மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. பொதுமக்களிடையே வேன் பிரச்சாரம் மேற்கொண்டார். உடன் கழக நிர்வாகிகள் வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, மா.ஜெயராம், தனச்செல்வம், ஒச்சு பாலு, சின்னம்மாள், மூவேந்திரன், இளைஞரணி சௌந்தர்ராஜன் பவர் மணிகண்டன் மற்றும் திரளான கூட்டணி கட்சியினர், கழகத்தினர் கலந்து கொண்டனர்.





திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில் தேர்தல் பணிமனையை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார். மாவட்டச் செயலாளர் க.தேவராஜ் எம்.எல்.ஏ. மற்றும் நல்லதம்பி எம்.எல்.ஏ. மற்றும் நிர்வாகிகள் உடன் உள்ளனர்.



கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களின் தந்தை மறைந்த முத்தூர் சா.பெருமாள்சாமி அவர்களின் திருவுருவப் படத்திற்கு கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கனிமொழி மலர்தூவி மரியாதை செலுத்தினார். இதில் வீட்டு வசதித்துறை அமைச்சர், ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளர் சு.முத்துசாமி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், ஈரோடு நாடாளுமன்ற கழக வேட்பாளர், கழக இளைஞர் அணி துணை செயலாளர் இ.கே.பிரகாஷ், கழக மகளிர் தொண்டரணி துணை செயலாளர் சத்யா பழனிக்குமார், கழக மாணவர் அணி துணை செயலாளர் வீரமணி, மாவட்ட துணை செயலாளர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பிரபாவதி பெரியசாமி உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து வாசு விக்ரம் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல் -19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, வாசு விக்ரம் அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு:-

| தேதி | | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 03.04.2024 | - | திருவள்ளூர் |
| 04.04.2024 | - | அரக்கோணம் |
| 05.04.2024 | - | வேலூர் |
| 06.04.2024 | - | கிருஷ்ணகிரி |
| 07.04.2024 | - | திருவண்ணாமலை |
| 08.04.2024 | - | ஆரணி |
| 09.04.2024 | - | காஞ்சிபுரம் |
| 10.04.2024 | - | திருபெரும்புதூர் |
| 11.04.2024 | - | தென்சென்னை |
| 12.04.2024 | - | மத்திய சென்னை |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 29.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து முக்குலத்தோர் புலிப்படைத் தலைவர் கருணாஸ் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்-19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, முக்குலத்தோர் புலிப்படை தலைவர் கருணாஸ் அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு:-

| தேதி | | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 02.04.2024 | - | சிவகங்கை |
| 03.04.2024 | - | இராமநாதபுரம் |
| 04.04.2024 | - | இராமநாதபுரம் |
| 05.04.2024 | - | திருநெல்வேலி |
| 06.04.2024 | - | தென்காசி |
| 07-04-2024 | | விருதுநகர் |
| 11-04-2024 | | தேனி |
| 12-04-2024 | | தேனி |
| 13-04-2024 | | மதுரை |
| 14-04-2024 | | திண்டுக்கல் |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 29.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

திருச்சி, புதுக்கோட்டை, தூத்துக்குடி, நீலகிரி, கோவையில்

# கர்நாடக மாநில கழக இலக்கிய அணியினர் பிரச்சாரம்!

## போர்முரசு கதிரவன் தலைமையில் !

பெங்களூரு, மார்ச் 30 -

தி.மு.க. தலைமைக் கழக பேச்சாளரும் கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி செயலாளருமான போர் முரசு கதிரவன் தலைமையில் தமிழ்நாட்டில் தேர்தல் பிரச்சாரம் செய்யப்பட உள்ளது. ஏப்ரல் 4ம் தேதி இவரது தலைமையில் பெங்களூரில் இருந்து தங்கவயல் கரிகாலன் தாமோதரன் உள்ளிட்டோர் தமிழ்நாட்டிற்கு புறப்பட்டு செல்கின்றனர். அங்கு திருச்சி புதுக்கோட்டை தூத்துக்குடி நீலகிரி மற்றும் கோவை நாடாளுமன்றத் தொகுதிகளில் தீவிர பிரச்சாரம் செய்து வாக்குகள் சேகரிக்கின்றனர்.

இந்த தொகுதிகளில் வீதி வீதியாகச் சென்று வாக்காளர்களை சந்தித்து வாக்குகள் கேட்கின்றனர்.

மேலும் துண்டு பிரசுரங்களும் விநியோகம் செய்கின்றனர்.

இது குறித்து கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி செயலாளர் போர் முரசு கதிரவன் கூறியிருப்பதாவது. நாடும் நமதே நாற்பதும் நமதே என்பதே திராவிட மாடல் ஆட்சியின் சரித்திர நாயகன் தளபதி முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களின் இலக்காக உள்ளது. தமிழன் எங்கு பிறந்தாலும் தமிழனே அயலான் எங்கு பிறந்தாலும் அயலானே என்ற பாவேந்தர் பாரதிதாசன் பாடல் வரிகளுக்கு விளக்கமாக கர்நாடக மாநிலத்தில் இருந்து நாங்கள் புறப்பட்டு சென்று தமிழகத்தில் தேர்தல் பிரச்சாரம் செய்ய இருக்கிறோம்.

தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், தளபதி முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் படை வரிசையில் தமிழ்நாடு உலக அரங்கில் தலைநிமிர்ந்து நிற்கிறது. எனவே சமூக அக்கறை கொண்ட மனிதநேயம் கொண்ட சமத்துவ சமநீதி தழைக்க தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ள இந்த தலைவர்களின் வழிகாட்டுதல் படி தமிழ்நாட்டில் அனைத்து தொகுதிகளிலும் கழக வேட்பாளர்கள், கூட்டணி வேட்பாளர்கள் மாபெரும் வெற்றி பெற வேண்டும் என்பதே எங்களின் மனவிருப்பம் அது தான்தமிழ்நாட்டு மக்களின் லட்சியமாகவும் உள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டி தி.மு.க. அலுவலகத்தில் சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் முன்னிலையில் அ.ம.மு.க. ஆண்டிபட்டி தொகுதி பொறுப்பாளரும் வடக்கு ஒன்றிய இணைச் செயலாளருமான எஸ்.எஸ்.புரம் அய்யனன் தி.மு.க.வில் தன்னை இணைத்துக் கொண்டார். உடன் கிழக்கு ஒன்றியச் செயலாளர் ராஜாராம், விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர் சேதுராஜா, பேரூர் செயலாளர் சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தென்காசி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட

# வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிவிப்பு!



தென்காசி, மார்ச் 30 -

தென்காசி நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதியில் கீழ்க்காணும் நபர்கள் தொகுதி பார்வையாளருடன் இணைந்து தேர்தல் பணியாற்ற தேர்தல் பணிக்குழுவில் நியமனம் செய்யப்படுகிறார்கள்.

அது பற்றிய விவரம் வருமாறு.

தேர்தல் பணிக்குழு வாசுதேவநல்லூர் தொகுதி. நல்லசேதுபதிதொகுதி பார்வையாளர் மாநில விவசாய அணி துணைச் செயலாளர். யு.எஸ்.டி.சீனிவாசன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.ஆ.சரவணன்தலைமை தீர்மானக் குழு உறுப்பினர். பரமகுரு தலைமை தீர்மானக் குழு உறுப்பினர்.

மனோகரன்மாவட்ட துணைச் செயலாளர்.

தேவதாஸ்பொதுக்குழு உறுப்பினர்.

வேலுச்சாமி பாண்டியன் பொதுக்குழு உறுப்பினர். சாகுல்ஹமீதுபொதுக் குழு உறுப்பினர். விஜயா நகர்மன்ற தலைவர்,மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர். கோமதி சங்கரிசிவகிரி பேரூர் தலைவர். இந்திராராயகிரி பேரூர் தலைவர் லாவண்யாவாசுதேவநல்லூர் பேரூர் தலைவர். ராசையா என்ற ராசாகழக உறுப்பினர், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர். பிச்சையாவழக்கறிஞரணி அமைப்பாளர். முகேஷ் இளைஞர் அணி அமைப்பாளர். மணிகண்டன்இளைஞர் அணி துணை அமைப்பாளர். நாகூர்கனி சிறுபான்மை நல அணி அமைப்பாளர். விஜய பாண்டியன்சுற்றுச்சூழல் அணி தலைவர். கார்த்திக் குமார் சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர். மணிகண்டன் மருத்துவரணி அமைப்பாளர். வெள்ளத்துரை தொண்டரணி தலைவர். மாடசாமிவிவசாய அணி அமைப்பாளர். செண்பககுற்றாலம்பொறியாளர் அணி துணைத் தலைவர். ராகவன் ஆதிதிராவிடர் அணி துணைத்தலைவர். ரமேஷ்நெசவாளர் அணி துணை அமைப்பாளர். உமாமகேஸ்வரிமகளிர் தொண்டர் அணி தலைவர். கவிதாமகளிர் அணி வலைதள பொறுப்பாளர். நீலமேகம் இலக்கிய அணி துணைத் தலைவர்.

மருதுபாண்டியன்கலை இலக்கிய பகுத்தறிவு அணி தலைவர். முத்துலட்சுமி தங்கராஜ்மாணவர் அணி துணைத்தலைவர். காசிராஜன்விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர். சேதுராமன்விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர். முருகேசன் அமைப்பு சாரா ஓட்டுனர் அணி தலைவர். அன்புராஜன்அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் சரவண குமார் வர்த்தக அணி அமைப்பாளர். சாமுவேல்மீனவரணி அமைப்பாளர். பொண்ணுத்துரைச்சிமகளிர் அணி துணை அமைப்பாளர். குருராஜ்மாவட்ட மருத்துவரணி துணை அமைப்பாளர். விஜயலட்சுமிமகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர். தமிழ்ச் செல்விமகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர். மீனாட்சிசுந்தரம்கலை இலக்கிய பகுத்தறிவு அணி துணை அமைப்பாளர். வெங்கடேசன் சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



திருப்புவனத்தில் 'இந்தியா' கூட்டணி கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர். திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர். த.சேங்கைமாறன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தி.மு.க. ஒன்றியச் செயலாளர்கள் வசந்தி சேங்கைமாறன் கடம்ப சாமி, நாகூர் கனி, காங்கிரஸ் சார்பில் மாரிமுத்து, நடராஜன், செந்தில்குமார், சிவக்குமார், ராஜாராம் கதிரேசன், ஜெயச்சந்திரன், சி.பி.எம். அய்யம்பாண்டி, ஈஸ்வரன், சி.பி.ஐ.சுந்தரலிங்கம், மோகன், ஜெயபிரகாஷ், ம.தி.மு.க. முத்திருளு.கருப்பையா, மதிவாணன், வி.சி.க.கண்ணன், வி.கண்ணன், வழக்கறிஞர் நாகரத்தினம், மக்கள் நீதி மையம் அழகேசன், மு.மு.க. வாண்டையார் மணிகண்டன், மனித நேயக் கட்சி முகமது கலாத், தி.க.ராஜாங்கம் மற்றும் 'இந்தியா' கூட்டணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.





வேலூர் கோட்டை மைதானத்தில் வருகிற 2ந் தேதி நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்ய வருகைதரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கும் விழா மேடையினை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பார்வையிட்டார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் சுஜாதா, மண்டல குழு தலைவர் வீனஸ் நரேந்திரன், பகுதிச் செயலாளர்கள் வி.ஜி.கே.சுந்தர விஜி, முரளி கிருஷ்ணன், மாமன்ற உறுப்பினர் வீ.எஸ்.முருகன், மாநகர துணை அமைப்பாளர் முன்னாஷெரீப், கலை இலக்கிய அணிஉமாசந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்றத் தேர்தல் 2024

## பொதுச்செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்!



2024 ஏப்ரல் - 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலை யொட்டி, கழகப் பொதுச் செயலாளரும் நீர் வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள், 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கீழ்காணும் இடங்களில் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 04-04-2024 | - | தருமபுரி |
| 05-04-2024 | - | சேலம் |
| 07-04-2024 | - | வந்தவாசி |
| 08-04-2024 | - | வடசென்னை |
| 10 -04-2024 } 12 - 4 - 2024- | - | அரக்கோணம், வேலூர் |


கழக அரசின் தேர்தல் அறிக்கை கண்டு பயந்து ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ஊதிய உயர்வு!

# பா.ஜ.க. அரசின் கண்துடைப்பு அறிவிப்பு!

## ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேட்டி!

திண்டுக்கல், மார்ச் 30-

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் அறிக்கையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பயனாளிகளுக்கு ஊதியமாக ரூ.400 வழங்கப் படும் என அறிவித்ததைய டுத்து மத்திய அரசு கண் துடைப்பிற்காக ஊதிய உயர்வை அறிவித்துள்ளது என ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேட்டியில் போது குறிப் பிட்டார்.



தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் அறிக்கையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பய னாளிகளுக்கு ஊதியமாக ரூ.400 வழங்கப்படும் என அறிவித்ததையடுத்து மத்திய அரசு கண் துடைப்பிற்காக ஊதிய உயர்வை அறிவித் துள்ளது என்று ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேட்டிய ளித்தார். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறு தித் திட்டத்தை முடக்க நினைக்கும் பா.ஜ.க.அரசு 100 நாள் வேலைதிட் டத்தை இந்தியாவில் முழு மையாக செயல்படுத்தாது என அமைச்சர் ஐ.பெரிய சாமி கூறினார்.

இந்தியாவில் கடந்த 2006ம் வருடம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் கொண்டு வரப்பட்டது. இது 100 நாள் வேலைவாய்ப்பு திட்டம் என்று அழைக்கப்பட்டு இத் திட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டவர்க ளுக்கு குறைந்தபட்ச ஊதி யத்துடன் 100 நாட்களுக்கு உடல் உழைப்பு சார்ந்த வேலைகள் தரப்பட்டது.

இத்திட்டம் மூலம் நாடு முழுவதும் சுமார் 5 கோடியே 97 லட்சம் குடும் பங்கள் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர். தற் போது 100 நாள் வேலை திட்ட பயனாளிகளுக்கு நாள் ஒன்றுக் ஊதியமாக ரூ294 வழங்கப்பட்டு வந்த நிலையில் மத்திய அரசு 4.63 சதவீதம் உயர்த்தி கொடுப் பதாக வித்துள்ளது. இதன்மூலம் 100 நாள் வேலைதிட்ட பயனாளிக ளுக்கு ரூ.319 ஊதியமாக கிடைக்கும். மத்திய அரசின் இந்த அறிவிப்பு குறித்து திமுக மாநில துணை பொதுச்செயலாளரும் தமி ழக ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான ஐ.பெரிய சாமி அவர்கள் செம்பட்டி யில் நிருபர்களை சந்தித்த போது கூறியதாவது

மத்திய அரசு 100 நாள் வேலைதிட்ட பயனாளிக ளுக்கு 4.6 சதவீதம் கூடுத லாக வழங்குவதாக அறிவித் திருப்பது கண்துடைப்பே. காரணம் இந்தியா முழுவ தும் 100 நாள் வேலைதிட் டத்தை மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசு முடக்கி வரு வதால் கிராமங்களில் வேலையில்லா திண்டாட்டம் உருவாகி வருகிறது.

100 நாள் வேலைதிட் டம் மூலம் கிராமங்களில் உள்ள ஏழை எளிய கிராம மக்கள் பயனடைகிறார்கள் என்று தெரிந்துதான் திரா விட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 100 நாள் வேலைதிட்ட பயனா ளிகளுக்கு மத்தியில் இந்திய கூட்டணி தலைமையில் ஆட்சி அமைத்தால் ரூ.400 ஊதியமாக வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு இந்தியா முழுவதும் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இதை தெரிந்து கொண்டு தான் மத் தியில் ஆளும் மோடி தலை மையிலான பாஜக அரசு இந்த ஊதிய உயர்வை அறி வித்துள்ளது.

கடந்த 10 வருடங்களாக மத்தியில் ஆட்சியில் அமர்ந்த பா.ஜ.க. அரசு 100 நாள் வேலைதிட்டத்தை முடக்கும் வகையில் அதற் கான நிதியை முறையாக செலவு செய்யாமல் மாற் றுப் பணிகளுக்கு செலவு செய்தது. இது தவிர தமிழ கத்தில் 100 நாள் வேலை திட்ட பயனாளிகளுக்கு வழங்க வேண்டிய 125 ஆயி ரம் கோடிக்கு பதிலாக 60 ஆயிரம் கோடியை மட்டும் வழங்கியுள்ளது. இவ்வாறு 100 நாள் வேலைதிட்ட பய னாளிகளுக்கு ஊதியம் வழங்காமல் வயிற்றில் அடிக்கும் பாஜக அரசு எப் படி ஊதிய உயர்வை முறை யாக கொடுக்கும். திராவிட மாடல் ஆட்சி நாயகன் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் அறிக் கையினை பார்த்து மத்தி யில் ஆளும் பா.ஜ.க. அர சும், எதிர்கட்சியாக உள்ள எடப்பாடி தலைமையி லான அ.தி.மு.க.வும், பொய் யான அறிக்கையை மக்கள் மத்தியில் கொடுத்து வரு கின்றனர். மக்களுக்கு தெரி யும் யார் சொன்னதை செய் வார்கள், செய்வதை சொல்வார்கள் இதை உணர்ந்தால் போதும். குறிப் பாக ஒன்றை மட்டும் சொல்ல வேண்டும் என் றால் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வ ராக இருந்தபோது தமிழகத் தில் 100 நாள் வேலைதிட் டம் சிறப்பாக செயல்படுத்த ப்பட்டது.

### வெற்று அறிவிப்பு!

அப்போது நான் தமிழக வருவாய்துறை அமைச்ச ராக பதவியில் இருந்த போது 2009ம் வருடம் திண் டுக்கல் மாவட்டம் 100 நாள் வேலைதிட்டத்தை செயல் படுத்தியதற்காக மத்திய அரசு சார்பாக விருது வழங் கப்பட்டது. அந்த விரு தினை அப்போது மாவட்ட ஆட்சியர் வாசுகி தமிழக அரசு சார்பாக பெற்றுக் கொண்டார். அப்போது திண்டுக்கல் மாவட்டத்தில் திட்ட இயக்குநராக பணிபு ரிந்த பொன்னையா அவர் கள் தற்போது ஊரக வளர்ச்சி முகமையில் இயக் குநராக உள்ளார் என்ற தோடு மத்திய அரசு அறி வித்த இந்த ஊதிய உயர்வு அறிவிப்பு வெற்று அறிவிப் பாகத்தான் இருக்கும். முழு மையாக செயல்படுத்த மாட்டார்கள்.

இதை உணர்ந்து கொண்டு தமிழக வாக்கா ளர்களாகிய 100 நாள் வேலைதிட்ட பயனாளிகள் வாக்களிக்கும் முன்பு இந் திய கூட்டணியில் தமிழகத் தில் தி.மு.க. தலைமையி லான கூட்டணி வேட்பாளர் போட்டியிடும் சின்னத்தில் வாக்களித்தால் மட்டும் தான் இந்தியாவில் 100 நாள் வேலை திட்டத்தை காப் பாற்ற முடியும்.

இவ்வாறு அவர் பேட்டி யளித்தார்.

வேட்பாளர்கள் தொல். திருமாவளவன் - எம்.கே.விஷ்ணுபிரசாத்தை ஆதரித்து

# சிதம்பரம் - கடலூர் தொகுதிகளில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிக்கை!

கடலூர், மார்ச் 30-

இந்தியா கூட்டணி கட்சி களின், சிதம்பரம் நாடாளு மன்றத் தொகுதி வேட்பாளர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திரு மாவளவன், எம்.பி., அவர்க ளையும் மற்றும் கடலூர் நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் டாக்டர்.எம். கே.விஷ்ணுபிரசாத் எம்.பி., அவர்களையும் ஆதரித்து இளைஞர் நலன், விளை யாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத் துறை அமைச்சர், கழக இளை ஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டம் - சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதி மற் றும் கடலூர் நாடாளுமன்றத் தொகுதிகளில் தேர்தல் பிரச் சாரம் செய்ய உள்ளார் என்று மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் எம்.ஆர்.கே.பன் னீர்செல்வம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கி ணங்க, தி.மு.க. தலைமையி லான இந்தியா கூட்டணி கட்சிகளின், சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் விடுதலை சிறுத் தைகள் கட்சி வேட்பாளர் தொல்.திருமாவளவன், எம்.பி., அவர்களையும் மற் றும் கடலூர் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் டாக் டர்.எம்.கே.விஷ்ணுபிரசாத் எம்.பி., அவர்களையும் ஆத ரித்து இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற் றும் சிறப்பு திட்ட செயலாக் கத்துறை அமைச்சர், கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர் கள் கடலூர் மாவட்டம் - சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதி மற்றும் கடலூர் நாடாளுமன்றத் தொகுதிக் குட்பட்ட கீழ்க்கண்ட இடங்களில் தேர்தல் பிரச்சா ரம் செய்ய உள்ளார்.

இன்று (30.03.2024 - சனிக் கிழமை,) மாலை 5.00 மணி - கடலூர் கடை வீதி, விருத் தாசலம்.

இன்று (30.03.2024 - சனிக் கிழமை, இரவு 7.00 மணி - சிதம்பரம், காட்டுமன்னார் கோவில் கடை வீதி, நான்கு முனை சந்திப்பு. (அரியலூர், ஜெயங் கொண்டம் வழி யாக)

நாளை (31.03.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணி - சிதம்பரம் தெற்கு ரத வீதி, சிதம்பரம்.

நாளை (31.03.2024 - ஞாயிற்றுக்கிழமை, காலை 10.30 மணி - கடலூர், கட லூர் சீமாட்டி சிக்னல், நான்கு முனை சந்திப்பு.

அதுசமயம், இக்கூட்டத் தில் திமுக மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகளின் கட லூர் மாவட்டத்திற்குட் பட்ட தி.மு.க., இந்திய தேசிய காங்கிரஸ், மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், திராவிடர் கழ கம், ம.தி.மு.க., இந்திய யூனி யன் முஸ்லீம் லீக், விடுதலை சிறுத்தைகள் கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி, மக்கள் நீதி மய்யம், மனித நேய மக் கள் கட்சி, மூவேந்தர் முன் னேற்றக் கழகம், தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர் கள் கட்சி, எம்.ஜி.ஆர்.கழ கம், கொங்குநாடு மக்கள் கட்சி, மனித நேய ஜனநாயக கட்சி, இந்திய தேசிய லீக், இந்திய சமூக நீதி இயக்கம், தமிழ் மாநில தேசிய லீக், திராவிட இயக்க தமிழர் பேரவை, சமத்துவ மக்கள் கழகம், ஆதி தமிழர் பேரவை, அகில இந்திய வல்லரசு பார் வார்டு பிளாக், கிறிஸ்துவ நல் லெண்ண இயக்கம், மாவீரன் மஞ்சள் படை, முக்குலத் தோர் புலிப்படை, மக்கள் விடுதலைக் கட்சி, ஆம்ஆத்மி கட்சி, யாதவ மக்கள் இயக் கம், தேவேந்திரகுல மக்கள் முன்னேற்றப் பேரவை, ஆதி தமிழர் கட்சி மற்றும் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திமுக தலைமையிலான இந் தியா கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்டக் கழக நிர் வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கழக செயலாளர்கள் மற்றும் நிர் வாகிகள்,

தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடா ளுமன்ற, சட்டமன்ற உறுப்பி னர்கள், முன்னாள், இந்நாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், நகரமன்றத் தலைவர்கள், பேரூராட்சி மன்றத் தலைவர் கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி, நக ராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞரணி, மாண வரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவ சாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக் கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவா ளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவி டர் நலக்குழு சிறுபான்மை யினர் நல உரிமை பிரிவு, தக வல் தொழில்நுட்ப பிரிவு அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி மற்றும் தொழி லாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகி கள், தி.மு.க. மற்றும் இந்தியா கூட்டணிக் கட்சிகளின் முன்னோடிகள், தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துக் கொள்ளுமாறு அன் புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

'இந்தியா' கூட்டணிக்கு தமிழ்நாடு பதிவு மூப்பு பட்டதாரி மற்றும்

# இடைநிலை ஆசிரியர் சங்கம் ஆதரவு!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதியைச் சந்தித்து தெரிவித்தனர்!

சென்னை, மார்ச் 30-

நாடாளுமன்றத் தேர்தல் - 2024-இல் 'தமிழ்நாடு பதிவு மூப்பு பட்டதாரி மற்றும் இடைநிலை ஆசிரியர் சங்கம்' மாநில தலைவர் கி.இரத்தி னக்குமார் மற்றும் நிர்வாகி கள் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இது குறித்த விவரம் வரு மாறு:-

'தமிழ்நாடு பதிவு மூப்பு பட்டதாரி மற்றும் இடை நிலை ஆசிரியர் சங்கம்' மாநி லத் தலைவர் கி.இரத்தினக்கு மார் மற்றும் நிர்வாகிகள், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்களை சந்தித்து, நடைபெறவிருக் கும் நாடாளுமன்றத் தேர்த லில் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாகவும், கூட்டணி கட்சி வேட்பாளர் கள் வெற்றி பெற தங்கள் சங்க நிர்வாகிகள் பாடுபடுவ தோடு, தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவதாகவும் உறுதி அளித்தனர்.

# திருத்துறைப்பூண்டியில் 'இந்தியா' கூட்டணி செயல்வீரர்கள் கூட்டம்!

## பூண்டி.கே.கலைவாணன் தேர்தல் பணிமனையைத் திறந்து வைத்தார்!

திருவாரூர்,மார்ச் 30-

நாகை நாடாளுமன்றத்தை சேர்ந்த திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதியில் 'இந்தியா' கூட்டணியின் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. பூண்டி கே.கலைவாணன் எம். எல்.ஏ., தலைமையில் நடை பெற்ற கூட்டத்தில் எம். செல்வராஜ் எம்.பி., தமிழ் நாடு அரசின் சிறப்பு பிரதி நிதி ஏ.கே.எஸ்.விஜயன், முன்னாள் அமைச்சர் தாட்கோ தலைவர் உ.மதி வாணன், கே.மாரிமுத்து எம்.எல்.ஏ., மாநில இளை ஞர் அணி துணை செயலா ளர் நா.இளையராஜா , எம். எஸ்.கார்த்திக், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.ஆடலரசன், ஆர்.எஸ். பாண்டியன் உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.

'இந்தியா' கூட்டணியில் தி.மு.க. தலைமையில் அங் கம் வகிக்கும் சி.பி.ஐ. கட் சியை சேர்ந்த வை.செல்வ ராஜ் நாகை நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் நிலையில், நாகை நாடாளு மன்றத் தேர்தல் பணிகள் இந்தியா கூட்டணியில் இடம்பெறும் கட்சிகளின் சார்பில் தேர்தல் பணிகள் முழு வீச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நாகை நடாளுமன்றத் தொகுதியில் இடம் பெறும் திருத்துறைப் பூண்டி சட்டமன்றத் தொகுதியில் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது.

ஆயிரக்கணக்கில் கூடி யிருந்த இந்த கூட்டத்தில் கூட்டணி கட்சிகளின் நிர் வாகிகள் ஒருங்கிணைந்து தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி னர். வேட்பாளர் வை.செல் வராஜ் வாக்கு கேட்டு பேசி னார். கூட்டத்தின் முடிவில் திருத்துறைப்பூண்டி சட்ட மன்ற தொகுதியின் தலைமை தேர்தல் பணிம னையை சட்டமன்ற உறுப் பினர் பூண்டி.கே.கலைவா ணன் திறந்துவைத்தார்.

இந்த இத்திறப்பு விழா விற்கு எம்.செல்வராஜ் எம்.பி., தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், முன்னாள் அமைச் சர் தாட்கோ தலைவர் உ. மதிவாணன், கே.மாரிமுத்து எம்.எல்.ஏ., எம்.எஸ்.கார்த் திக், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.ஆடலர சன், ஆர்.எஸ்.பாண்டியன், ஒன்றியகுழு துணை தலை வர் எம்.ராமகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர்கள் ப.பிரகாஷ், பால.ஞான வேல், வீ.எஸ்.ஆர்.தேவ தாஸ், இரா.மனோகரன், நகர்மன்ற தலைவர் (மும் தாஜ்)நவாஸ்கான், அவைத் தலைவர் வி.பி.எஸ்.பாலகி ருஷ்னண், ஒன்றிய துணை செயலாளர்கள் சேதுமுரு கானந்தம், எம்.என்.ராஜா, கவிதா நவநீதம், தமிழ் ஜோதி, எஸ்.பி.பாஸ்கர், பொதுக்குழு உறுப்பினர் செல்வா ஜெயதேவன், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் குன்ன லூர் அன்பழகன், சிக்கந்தர், எம்.பி.எடிசன், எஸ்.ஜாகிர் உசேன், இளையராஜா உள் ளிட்டோர் முன்னிலை ஏற் றனர்.




சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் கார்த்தி ப.சிதம்பரத்தை ஆதரித்து நடைபெற்ற 'இந்தியா' கூட்டணி செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார். உடன் ப.சிதம்பரம் எம்.பி., காங்கிரஸ் வேட்பாளர் கார்த்தி.சிதம்பரம், மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் அ.கணேசன், மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளார்கள்.

# உடன்பிறப்பே... 51

நீரை.மகேந்திரன்

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில் பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த ச.அக்கினிராசு அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்..**



ஓவியம் : ரவி பேலட்

# ச.அக்கினிராசு கொள்கை தீபத்தின் எஃகு இதயம்!

*1964-ஆம் ஆண்டு, மொழிப்போர் உச்சம் பெற்றிருந்த நேரம். இந்தி ஆதிக்க அரசியல் சட்ட மொழிப்பிரிவை எரிக்க வேண்டும் என பேரறிஞர் அண்ணா அவர்கள், தனது தம்பிகளுக்குக் கட்டளையிட்டார்.*

*மதுரை மாநகரின், திலகர் திடல்தான் அந்தப் போராட்டத்தின் மையம். முத்தமிழறிஞர் கலைஞர் போராட்டத்தின் பொறுப்பாளர். களவீரர்களின் பட்டியலில் இடம்பிடிக்க கழகத்தினர் நீ, நான் என போட்டியிட்டனர். அவர்களில் 31 வயதான இளைஞர் ஒருவர், தனது அரசுப் பணியினைத் தூக்கி எறிந்துவிட்டு, போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைப்பட்டார்.*

*மதுரைச் சிறையிலும், திருச்சி சிறையிலுமாக 18 மாத கால சிறைவாசத்துக்குப் பின்னர் விடுதலையான அந்த இளைஞரை வரவேற்க, திருச்சி மத்திய சிறைவாசலுக்கே வந்து நின்றார் அண்ணா. அண்ணாவின் அன்பையும், கலைஞரின் வழிகாட்டலையும் பெற்ற அந்த இளைஞர் பெயர் அக்கினிராசு.*

## எஃகு உறுதி

*“மதுரை மாவட்ட தி.மு.கவின் எஃகு போன்ற உறுதி படைத்த அக்கினிராசு, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கொள்கை தீபத்தை ஏந்தி, தி.மு.க.வுக்கும், மக்களுக்கும் சிறப்பாகப் பணியாற்றியவர்” என இன்றைய கழகத்தலைவர் போற்றிய கழக முன்னோடி, கலைஞரின் அன்பு உடன்பிறப்பு அக்கினிராசு.*

*1933-ஆம் ஆண்டு, மதுரை, திருப்பரங்குன்றம் அருகிலுள்ள கூத்தியார்குண்டு என்கிற கிராமத்தில் பிறந்தவர் அக்கினிராசு. தந்தை பெயர் சங்கிலி சேர்வை. தாயார் பெயர் மூக்காயி அம்மாள். உடன்பிறந்தவர்கள் 4 பேர்.*

*அக்கினிராசுவின் தந்தை, அன்றைய சென்னை மாகாணக் காவல்துறையில், தலைமைக் காவலராக, ஒட்டன்சத்திரம் காவல் நிலையத்தில் பணியாற்றியவர் என்பதால், ஓரளவு பொருளாதாரத் தன்னிறைவு கொண்டிருந்தார். அதனால், அக்கினிராசுவுக்குக் கல்வி கிடைப்பதில் சிரமங்கள் இல்லை. தொடக்கக் கல்வியை உள்ளூரிலும், உயர்நிலைக் கல்வியை பசுமலையிலும், பின்னர் மதுரையில் கல்லூரிப் படிப்பையும் முடித்தார்.*

*1951-ஆம் ஆண்டில், கல்லூரியில் மாணவர் மன்ற நிகழ்ச்சிக்காக அறிஞர் அண்ணா வந்தபோது, வரவேற்றுப் பேசிய மாணவர் அக்கினிராசு. அவரது பேச்சைக் கேட்ட அண்ணா, மதுரை முத்து, எஸ்.எஸ்.தென்னரசு ஆகிய தென்மாவட்ட முன்னோடிகளிடம் அக்கினிராசுவை வளர்த்துக் கொண்டு வர வேண்டும் எனக் கூற, அவ்வாறே அரசியல், திராவிட முன்னேற்றக் கழகம் என அவரது அரசியல் வாழ்க்கை தொடங்கியது.*

## திருப்பரங்குன்றம் மாநாடு

*கல்லூரி முடித்த அவருக்கு மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வரைபட உதவியாளர் வேலை கிடைக்க, வேலையில் இருந்து கொண்டே இயக்கப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். குறிப்பாக, தனது 18 வயதிலேயே திருப்பரங்குன்றம் நகர தி.மு.க. செயலாளராகப் பொறுப்பேற்றுச் செயல்பட்டவர் அக்கினிராசு.*

*1962-ஆம் ஆண்டில் கழகம் முதல் பிளவினை சம்பத் உருவில் சந்தித்தது. அதையடுத்து, கழகத்தின் மாநில மாநாடு மதுரையில் நடத்த முடிவானபோது, திருப்பரங்குன்றம் அருகே நடத்த அதற்கான ஏற்பாடுகளைச் செய்தவர். அவனியாபுரம் - திருப்பரங்குன்றம் இடையே, தனியாருக்குச் சொந்தமான 100 ஏக்கர் நிலத்தில் மிகப் பிரமாண்டமான மாநாட்டுத் திடலை உருவாக்கியதுடன், மாநாட்டில் விருந்தினர் உபசரிப்புக் குழுவிலும், தொண்டர் படைத் தளபதியாகவும் செயல்பட்டு, கழக முன்னோடிகளின் அன்புக்குப் பாத்திரமானார்.*

## ரத்தத்தில் கழகம்

*அரசுப் பணியில் இருந்தாலும், அதை இரண்டாம்பட்சமாகக் கருதியதுடன், கழகப் பணியே அவரது ரத்தத்தில் கலந்த உணர்வாக இருந்தது என்பதை மெய்ப்பிப்பதற்கான காலமாக மொழிப்போர் அமைந்தது. தமிழ் மொழியைப் பாதுகாக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்தப் போராட்டத்தில் துணிச்சலுடன் பங்கேற்ற ஐவர் குழுவில் ஒருவராக இருந்தார். அப்போது, கைது செய்யப்பட்டு 18 மாதங்கள் சிறைத் தண்டனை பெற்றார். சிறையில் இருந்து வெளிவந்தவரை வாசலிலேயே நின்று வரவேற்றவர் பேரறிஞர் அண்ணா.*

*1967-ஆம் ஆண்டில், சட்டமன்றத் தேர்தலில், திருப்பரங்குன்றம் தொகுதியில் போட்டியிட்டு தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆருக்கு அடுத்து, அதிக ஓட்டு வித்தியாசத்தில் வெற்றிபெற்றார் அக்கினிராசு.*

## கிழிக்கப்பட்ட தீர்மான நகல்

*அண்ணாவுக்குப் பின்னர் கலைஞரின் தலைமையை ஏற்ற முன்னோடிகளில் மதுரையின் அக்கினிராசுவுக்குத் தனி இடம் உண்டு. 1972-ஆம் ஆண்டில், கலைஞரின் தலைமையை ஏற்பதில், சில தலைவர்களுக்கு முரண்பாடு உருவானபோது மதுரை நகரில் பெரும் குழப்பங்கள் நீடித்தன. தி.மு.க.வுக்கு எதிராக மாணவர்கள் போராட்டம் தூண்டி விடப்பட்டது. எஸ்.எஸ்.தென்னரசு, பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் ஆகியோர் துணையுடன் அவற்றை முறியடித்தார் அக்கினிராசு.*

*அப்படியான இக்கட்டான நேரத்தில் சென்னையில் நடந்த கூட்டத்தில் எம்.ஜி.ஆரைக் கட்சியில் இருந்து நீக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதை கொஞ்சம் ஒத்தி வைக்கலாம் என கலைஞர் சொன்னதும், அந்தத் தீர்மான நகலைக் கிழித்து எறிந்து கழகத்தின் கட்டுக்கோப்பை மட்டுமே விரும்புவதாக அறிவித்தார். இத்தனைக்கும் அவர் எம்.ஜி.ஆர் ரசிகராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. எம்.ஜி.ஆரா? அண்ணா கண்ட கழகமா? என்கிறபோது, கலைஞர் பக்கம் நின்று கட்சியை வலுப்படுத்தும் எஃகு இதயம் கொண்டவராக இருந்தார்.*

**மதுரை மாவட்ட தி.மு.க செயலாளராகச் செயலாற்றி, தி.மு.க ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, மதுரை மாவட்ட மக்களுக்குப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தத் தூண்டுகோலாக இருந்தவர்.**

## மிசா சிறை வாசம்

*ஜனநாயகத்தை நிலைநாட்டும் மிசா போராட்டத்தில் பங்கேற்றுச் சிறை சென்றார். 1977-இல் கருப்புக் கொடி காட்டும் போராட்டத்தில் சிறை என கழகத்தினரின் தியாக வாழ்க்கைக்கு அக்கினிராசும் சான்றாக நிற்கிறார்.*

*1978 ஆம் ஆண்டில், மதுரையில் ஒரு நிகழ்ச்சிக்காகச் செல்ல இருந்த கலைஞருக்குக் கருப்புக் கொடி காட்டப் போவதாக சிலர் அறிவித்தனர். அதையடுத்து ‘மதுரைக்கு வருகிறேன் உடன்பிறப்பே’ என கடிதம் எழுதிவிட்டு, மதுரைக்குப் புறப்பட்டார் கலைஞர். மதுரை ரயில் நிலையத்தில் இறங்க வேண்டிய அவரை, கொடை ரோடு நிலையத்தில் இருந்தே வாகன ஊர்வலமாகக் கொண்டு செல்கின்றனர். ‘‘கொடை ரோட்டில் எஸ்.எஸ்.தென்னரசு, தா.கிருஷ்ணன், சுப. தங்கவேலன், வைகோ, தங்கபாண்டியன், அக்கினிராசு ஆகியோர் காத்திருந்தனர் எனப் பதிவு செய்கிறார் கலைஞர். அதே ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் தேதி மதுரையில் கழகத்தின் பொதுக்குழுவைக் கூட்டினார் கலைஞர். அதற்குப் பொறுப்பேற்றிருந்தவர் அக்கினிராசு.*

*இப்படி பெயருக்கு ஏற்ப, கழகச் செயல்பாடுகளில் தீவிரத்துடனும், தன்னலம் கருதாதும் செயல்பட்டவர் அக்கினிராசு. மதுரை மாவட்டக் கழக வளர்ச்சியில் மட்டுமல்ல, மக்களின் நம்பிக்கை பெற்றவராகவும் விளங்கியவர். மதுரை மாவட்ட தி.மு.க செயலாளராகச் செயலாற்றி, தி.மு.க ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, மதுரை மாவட்ட மக்களுக்குப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தத் தூண்டுகோலாக இருந்தவர்.*

## அண்ணா விருது

*அவரது கழகப் பணிக்காக 1994-ஆம் ஆண்டில் கழகத்தின் அண்ணா விருது வழங்கிப் பெருமை சேர்த்தார் கலைஞர். 1998 முதல் 2004 வரை மாநிலங்களவை உறுப்பினராக நியமித்து தமிழரின் குரலை, தமிழ்நாட்டின் பிரச்சினைகளை அக்கினிராசு மூலம் டெல்லியில் ஒலிக்க வைத்தார் கலைஞர்.*

*தி.மு.க, தொண்டர்களின் அன்பைப் பெற்றிருந்த அக்கினிராசு அவர்கள், 2020 ஆம் ஆண்டில், தனது 87 வது வயதில், வயது மூப்பு காரணமாக இயற்கை எய்தினார். கொரோனா காலம் என்பதால், கழகத்தினர் திரளாகக் கலந்து கொள்ள முடியவில்லை. ஆனால், 1967 ஆம் ஆண்டு அவர் சட்டமன்ற உறுப்பினரானபோது, ‘காஞ்சி’ இதழின் அட்டைப்படத்தில், 32 வயதில் சட்டமன்ற உறுப்பினரான அக்கினிராசு படத்தை அச்சிட்டிருந்தார் பேரறிஞர் அண்ணா. அந்தப் படம் கழகத்தினர் இதயத்தில் என்றென்றைக்கும் கல்வெட்டாக நிலைத்து நின்று அவர் புகழ் பரப்பும்.*

**...துடிக்கும்**

## அரசியல் கச்சேரி பழகுவோம்!

சென்னையில் வரும் சனிக்கிழமை ‘பெரியாரும் கர்நாடக சங்கீதமும் – இசையின் அரசியல்’ என்கிற தலைப்பில் கருத்தரங்க நிகழ்ச்சி நடைபெற உள்ளது. அதையொட்டி எழுத்தாளர் தமிழ் காமராசன் பதிவில், “கர்நாடக இசைப் பாடகர் டி.எம்.கிருஷ்ணாவுக்கு ‘சங்கீத கலாநிதி’ விருது வழங்குவதில், சில பார்ப்பன சனாதன தரப்பினர் எதிர்ப்புக் குரல் எழுப்பியதை அறிவோம்.

மோடியைத் தொடர்ந்து விமர்சனம் செய்துகொண்டும், தந்தை பெரியாரைப் பாடும், இஸ்லாமிய – கிறிஸ்தவ மதங்களைப் போற்றிப் பாடும் கிருஷ்ணாவுக்கு விருது கொடுப்பது, ஆச்சார விரோதம் என்பது சனாதன தரப்பினர் வாதம்.

இசையிலும் சாதி ஆசாரத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று எண்ணுகின்றனர். அதே நேரத்தில் கிருஷ்ணா செய்து வரும் இசைக் கலகத்துக்கு ஆதரவுக் குரல்களும் அதிகரித்துள்ளன. குறிப்பாக, கிருஷ்ணாவை ஆதரித்துப் பேசும் பார்ப்பன வகுப்பல்லாதவர்கள், இசையின் அரசியல் குறித்தும் அறிந்து கொள்ள வேண்டியது தேவையாக உள்ளது.

பார்ப்பனரல்லாதோரிடமிருந்து செவ்வியல் கலைகளை, கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம் என்கிற பெயர்களில் அபகரித்து, இந்து / இந்தியப் பெருமித அடையாளங்களாக மாற்றிய வரலாற்றையும் அரசியலையும் கிருஷ்ணா அவர்களே கலைஞராகவும் ஆய்வாளராகவும் இருந்து எழுதியுள்ளார்.

இன்று பார்ப்பன வகுப்பிலிருந்து சாதி முறையைக் கெடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் ‘சாதி கெட்டுப் போய்விட்ட’ கிருஷ்ணா போன்ற சுதந்திரச் சிந்தனையாளர்கள் உறுதியாகவும் தெளிவாகவும் இருக்கும்போது, இதுபற்றி சிந்திக்கும் அனைவரும் இன்னும் ஒருபடி முன்னே போய், இசையின் அரசியலைப் பேச வேண்டும்” எனக் குறிப்பிட்டுள்ளார். இந்த நிகழச்சி 30.03.2024 மாலை 6 மணிக்கு ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள கவிக்கோ மன்றத்தில் நடைபெற உள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



டி.ஜான்சன்



### அணியான தொண்டர்..!

1986-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் திருப்பரங்குன்றம் ஒன்றியத்தின் சார்பில் பங்கேற்று 49 நாட்கள் மதுரை மத்தியச் சிறையில் அடைக்கப்பட்டேன். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் மீது கொண்ட பற்றினால், அவர் மதுரை வரும்போதெல்லாம் தொண்டர் அணியில் நான் பணியாற்றுவது வழக்கம். 1989-ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது மதுரை வந்திருந்தார்கள். பாண்டியன் ஹோட்டலில் இருந்த அவரை தொண்டர் அணித் தோழர்கள் புடை சூழ நானும் உடன் சென்று அழைத்து வந்த போது எடுத்த படம்.

**–டி.ஜான்சன், மாவட்ட தி.மு.க இலக்கிய அணி, மதுரை தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### சிங்கத்தமிழன் சின்னச்சாமி!

1964-இல் இந்தியை ஆட்சிமொழியாக்கி அரியணை ஏற்றும் முன்னெடுப்புகளை எதிர்த்து, தமிழ்நாட்டில் மொழித் திணிப்புக்கு எதிரான களங்கள் சூடுபிடித்தன. 25 வயது காளையாக இருந்த கீழப்பழுவூர் சின்னச்சாமி 15 நாட்கள் சிறையிலிருந்துவிட்டு வெளியே வந்தவுடன், ‘தமிழே நீ வாழ என் உயிரைக் கொடுக்கிறேன்’ என தீக்குத் தன்னை இரையாக்கினார். ‘இனி சின்னச்சாமியை சிங்கத்தமிழன் சின்னச்சாமி’ என்றே அழைப்போம் என்றார் கலைஞர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

433

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131